RNINUMBER:TNTAM/2018/75087

# மெட்ராஸ் மணி

MADRAS MANI DAILY TAMIL தைரியம் மற்றும் நெறிமுறை பத்திரிகை PUBLISHED FROM - CHENNAI

07.12.2025 (ஞாயிற்றுக்கிழமை) பக்கங்கள் 8 விலை 5.00 மணி 7 ஓசை 259

Facebook/dailymadras@gmail.com dailymardras@gmail.com

4 திருவண்ணாமலையில் ஒரு லட்சம் பேர் கலந்து கொள்ளும் மண்டல இளைஞரணி நிகழ்ச்சி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்



6 இலங்கையில் மீட்பு பணி முடித்து நாடு திரும்பிய நம் வீரர்கள்



8 ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பை: பெல்ஜியத்தை ஷூட் அவுட்டில் வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறியது இந்தியா



### தாயுமானவர் திட்டம் உள்பட

## கல்வி, சுய தொழில் நலத்திட்ட உதவிகள்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

**சென்னை, டிச.07–**

மாற்றுத் திறனாளி ,முதியோர் பயன்பெறும் தாயுமானவர் திட்டம் உள்பட கல்வி, சுயதொழில் நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னை கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில் நடந்த அரசு நிகழ்ச்சியில் வழங்கி தொடங்கி வைத்தார்.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி கலையரங்கத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் .

தமிழக மக்களுக்கு ரேஷன் திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகளை தமிழக அரசு வழங்கி வருகிறது. ரேஷன் கடைகள் மூலமாக ரேஷன் பொருட்கள் வழங்கப்படுவது மட்டுமல்லாமல், மகளிர் உரிமைத் தொகை, பொங்கல் பரிசுத் தொகுப்பு போன்ற உதவிகளும் ரேஷன் அட்டைதாரர்களுக்குக்கிடைக்கிறது. இந்நிலையில், வயதானவர்கள் மற்றும் ரேஷன் கடைக்கு வர முடியாத அளவுக்கு உடல் ரீதியாக இயலாமல் உள்ள மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு வீட்டுக்கே வந்து ரேஷன் பொருட்களை டெலிவரி செய்யும் தாயுமானவர் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழக மக்களுக்கு ரேஷன் திட்டத்தின் கீழ் பல்வேறு உதவிகளை தமிழக அரசு வழங்கி வருகிறது. ரேஷன் கடைகள் மூலமாக ரேஷன் பொருட்கள் வழங்கப்படுவது மட்டுமல்லாமல், மகளிர் உரிமைத் தொகை, பொங்கல் பரிசுத் தொகுப்பு போன்ற உதவிகளும் ரேஷன் அட்டைதாரர்களுக்குக்கிடைக்கிறது. இந்நிலையில், வயதானவர்கள் மற்றும் ரேஷன் கடைக்கு வர முடியாத அளவுக்கு உடல் ரீதியாக இயலாமல் உள்ள மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு வீட்டுக்கே வந்து ரேஷன் பொருட்களை டெலிவரி செய்யும் தாயுமானவர் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் இவர்களுக்கு பெரிய நிவாரணம் கிடைத்து ள்ளது. ரேஷன்கடைகளுக்கு நீண்ட தூரம் அலைவது மற்றும் வரிசையில் நீண்ட நேரம் காத்திருப்பது போன்றசிரமங்கள்குறைந்துள்ளன. சம்பந்தப்பட்ட ரேஷன் கடைகளின் அறிவிப்புப் பலகையில் ரேஷன் டெலிவரி தேதியை பொதுமக்கள் அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை பயனாளிகள் பயன்படுத்திக் கொள்ள அரசு தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழக அரசு வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பால் பயனாளிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்த டிசம்பர் மாதத்தில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் செயல்படும் நாட்கள் குறித்த பட்டியலை தமிழக அரசு வெளியியிட்டுள்ளது. அதன்படி, சென்னை பெருநகராட்சி மண்டலத்தில் டிசம்பர் 6, 7, 8, 9 ஆகிய தேதிகளில் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு ரேஷன் பொருட்கள் வீடு தேடி வந்து வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.அதன்படி டிசம்பர் மாதத்திற்கான ரேஷன் பொருட்கள் சென்னையில் குறிப்பிட்ட தேதிகளில் விநியோகம் செய்யப்படுகிறது.

இதுதொடர்பாக கூட்டுறவுச்சங்கங்களின்கூடுதல் பதிவாளர் சென்னை மண்டலம் பாபு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்: முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், டிசம்பர் மாதத்தின் 6, 7, 8, 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் சென்னையில் அண்ணாநகர், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர், தேனாம்பேட்டை, அடையாறு, திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி. க.நகர், அம்பத்தூர், கோடம்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் ஆகிய 15மண்டலங்களில் கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் 990 நியாயவிலைக் கடைகளின் விற்பனையாளர்கள் அத்தியாவசியப் பொருட்களை வீடு தேடி விநியோகம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயன்பெறும் முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகள் இத்திட்டத்தை தவறாமல் பயன்படுத்திகொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகம் அரங்கில்இன்று காலைநடந்த அரசு நிகழ்ச்சியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

## கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு ரஷ்யா எரிபொருள் விநியோகம்

**புதுடெல்லி, டிச. 07–**

தமிழ்நாட்டின் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 2 அணு உலைகளில் 2,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை தவிர மேலும் 4 அணு உலைகள் ரஷ்யா உதவியுடன்கட்டப்பட்டு வருகின்றன.கூடங்குளத்தின்3வது அணு உலைக்கு ஆரம்ப கட்ட நிரப்புதலுக்கான அணு எரிபொருளின் முதல் தொகுதியை டெலிவரி செய்துள்ளதாக ரஷ்ய



அரசின் அணுசக்தி நிறுவனமான ரோசாட்டம் தெரிவித்துள்ளது.ரஷ்ய அதிபர் புதின் இந்தியா வந்துள்ள நிலையில் இத்தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்யாவின் நோவோசிபிர்ஸ்க் கெமிக்கல் கான்சென்ட் ரேட்ஸ் ஆலையில் தயாரிக்கப் பட்ட இந்த எரிபொருளை ரோசாட்டம் அணு எரிபொருள் பிரிவால் இயக்கப்படும் ஒரு சரக்கு விமானம் டெலிவரி செய்துள்ளது.இது தொடர்பாக ரோசாட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 3வது மற்றும் 4வது அணு உலைகளுக்கு முதல் கட்ட நிரப்புதலில் தொடங்கி அணு உலையின் உற்பத்தி காலம் முழுவதும் அணு எரிபொருள் வழங்க 2024ம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

அதன் அடிப்படையில் ரஷ்யாவில் இருந்து 7 சரக்கு விமானங்கள்மூலம் எரிபொருள் அனுப்பி வைக்கதிட்டமிடப்பட்டது. இதில்முதல்தொகுதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது’’ என்று கூறப்பட்டுள்ளது.

### சந்திப்பின்போது நடந்தது என்ன?

## அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் பதவியை மீண்டும் எனக்கு அளிக்க வேண்டும்

### அமித்ஷாவுக்கு ஓ. பன்னீர் செல்வம் நிபந்தனை

**சென்னை, டிச. 07–**

ஓ. பன்னீர் செல்வம் சமீபத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்துப் பேசினார். இது தொடர்பாக பல்வேறு யூகங்கள் சிறகடித்துப் பறக்கின்றன. அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் பதவியை தனக்கு மீண்டும் அளிக்க வேண்டும் என்று ஓ. பன்னீர் செல்வம் தொடர்ந்து வற்புறுத்தி வருவதாக செய்தி கசிந்துள்ளது. ஆனால் எடப்பாடி பழனிசாமி இதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்று கூறப்படுகிறது. அ.தி.மு.க. வில் இருந்து நீக்கப்பட்டு கடந்த சில ஆண்டுகளாக தனித்திருக்கும் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வத்தின் அடுத்தகட்டநடவடிக்கை என்ன என்பது குறித்து அவரது ஆதரவாளர்களும், அ.தி.மு.க. வினரும் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர். சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் திமுக தன்னுடைய ஆட்சியை தொடரும் முயற்சியில் தீவிரமாக இயங்கி வருகிறது. அதே நேரத்தில் அ.தி.மு.க. வும் மீண்டும் ஆட்சியை பிடிக்க வேண்டும் என்பதற்காக கீழ்மட்ட நிர்வாகிகள் தொடங்கி மேல்மட்டம் வரை அமைப்புகளை வலுப்படுத்தி வருகிறது.

ஆனால் அ.தி.மு.க. விலிருந்து நீக்கப்பட்ட ஓ.பி.எஸ். , எந்த தரப்பில் நிற்பார் என்பது மட்டும் தொடர்ந்து குழப்பமாகவே இருக்கிறது. ஓ.பன்னீர்செல்வம் எடப்பாடி பழனிசாமியுடன் ஏற்பட்ட உட்கட்சி மோதலில் தனது ஒருங்கிணைப்பாளர்பதவியையும், கட்சி அடிப்படை உறுப்பினர் பதவியையும் இழந்தார். அவர்நீதிமன்றங்கள்வரை சென்று போராடியபோதும் எந்த வழியிலும் முன்னேற்றம் கிடைக்கவில்லை. இதனால் அவர் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து ராமநாதபுரம் தொகுதியில் பலாப்பழம் சின்னத்தில் போட்டியிட்டார். ஆனால் அங்கும் தோல்வியே கிட்டியது. அதன் பிறகு மீண்டும்பா.ஜ.க.கூட்டணியில் தொடர்வார் என நினைத்த போதும், அ.தி.மு.க.– பா.ஜ.க. கூட்டணி உருவானதால் ஓ.பி.எஸ். ஒதுக்கப்பட்டார். நிபந்தனையில்லாமல் அ.தி.மு.க. வில் இணைவதற்கு தயாராக இருப்பதாக ஓ.பி.எஸ். அறிவித்தார். ஆனால் எடப்பாடி பழனிசாமி அவரை மீண்டும் சேர்க்க மறுத்துவிட்டார். இதற்கிடையில் ஓ.பி.எஸ். க்கு ஆதரவாகஇருந்தமனோஜ் பாண்டியன் திடீரென திமுகவில் இணைந்தார். அதே போல் செங்கோட்டையனும்அ.தி.மு.க.விலிருந்து தமிழக வெற்றிக் கழகத்திற்கு தாவினார். தொடர்ச்சியான இந்த மாற்றங்கள் ஓ.பி.எஸ்சை குழப்பத்தில் ஆழ்த்தின. இந்த நிலையில் டிசம்பர் 15–ஆம் தேதி எதிர்காலத்துக்கான மிகப்பெரிய முடிவை அறிவிப்பேன் என்று ஓ.பி.எஸ். தகவல் வெளியிட்டிருந்தார். இதற்கிடையில், அண்மையில் ஓ.பி.எஸ். கொச்சியில் இருந்து நேரடியாக டெல்லி புறப்பட்டதாக தகவல் வெளியானது. டெல்லியில் ஓ.பி.எஸ். அமித்ஷாவை 20 நிமிடங்கள் தனியாக சந்தித்துப் பேசியது மிகப்பெரிய அரசியல் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. பா.ஜ.க. தேசியத் தலைமை ஓ.பன்னீர் செல்வத்திடம் கனிவு காட்டி வருவதாக கூறப்படுகிறது. கட்சியில் இருந்து நீக்கப்படும் வரை அவர் வகித்து வந்த அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் பதவியை மீண்டும் பெற வேண்டும் என்பதே பன்னீர்செல்வத்தின் கோரிக்கை என்று அவருக்கு நெருக்கமான மூத்த தலைவர் தெரிவித்தார்.

பா.ஜ.க. முகாம் அவரது கோரிக்கை "பொருத்தமாக கவனிக்கப்படும்" என்று குறிப்பிட்டது. நீக்கப்பட்ட உறுப்பினர்களை மீண்டும் சேர்க்காவிட்டால்அ.தி.மு.க.–பா.ஜ.க. கூட்டணியின் தோல்வி தவிர்க்க முடியாதது என்று பன்னீர்செல்வம் அமித்ஷாவிடம் தெரிவித்ததாக நெருங்கிய சகாக்கள் தெரிவித்தனர். 2017 முதல் பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. சந்தித்த தொடர்ச்சியான தேர்தல் தோல்விகளை அவர் சுட்டிக்காட்டினார்.சமீபத்தில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்த முன்னாள் அமைச்சர் கே. ஏ. செங்கோட்டையனுடன் நான் பேசவில்லை, அவரும் என்னுடன் பேசவில்லை” என்று தெரிவித்தார்.ஓ.பி.எஸ். ஆதரவாளரும் முன்னாள் எம்எல்ஏவுமான ஏ. சுப்புரத்தினம் " கட்சி வேறுபாடுகள் இல்லாமல் அனைத்து தலைவர்களையும் ஓ.பி.எஸ். மதிக்கிறார். முன்னாள் கூட்டணி கட்சித் தலைவர் ஒருவர் எங்களை அழைத்தபோது அவர் மரியாதை நிமித்தமாகக் கலந்துரையாடினார். அமித் ஷா தனது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவார் என்று எங்கள் தலைவர் நம்புகிறார். நாங்கள் எதிர்பார்க்கும் விதத்தில் விஷயங்கள் நடக்கவில்லை என்றால், தேர்தலில் போட்டியிடுவதற்கான பிற சாத்தியக்கூறுகளை நாங்கள் ஆராய்வோம்” என்று தெரிவித்துள்ளார்.

ஓ.பன்னீர் செல்வத்தின் கோரிக்கையை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஒரு பொருட்டாகக் கருதவில்லை. எனவே ஓ. பன்னீர் செல்வத்தின் விருப்பம் நிறைவேற வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை.

### சென்னையில் இருந்து மீண்டும்

## இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமான சேவை தொடங்கியது

### கோவை, கொச்சி உள்ளிட்ட 10 விமானங்கள் இயக்கம்

**சென்னை, டிச.07–**

சென்னையில் இருந்து இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமான சேவை அதிகாலை 3 மணியில் இருந்து தொடங்கியது கொல்கத்தா, புவனேஸ்வர், கோவை, ஜெய்ப்பூர், கொச்சி உள்ளிட்ட 10 விமானங்கள் இயக்கப்படுகிறது.

நாடு முழுவதும் கடந்த 4 நாட்களாக இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானங்களின் சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இன்றும் இண்டிகோ விமானங்கள் பல ரத்து செய்யப்பட்டுள்ளன. இதற்கு, விமானி மற்றும் ஊழியர் பற்றாக்குறை, தொழில்நுட்ப பிரச்சனை என பல்வேறு காரணங்கள் கூறப்படுகிறது.



சென்னையில் மூன்றாவது நாளாக இண்டிகோ விமானங்களின் சேவை நேற்று பாதிக்கப்பட்டது. குறிப்பாக, வெள்ளிக்கிழமை காலை 8 மணி வரை 62 விமானங்கள் ரத்தான நிலையில், 62 விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டன. இதனால் கடும் அதிருப்தி அடைந்த பயணிகள் சென்னை விமான நிலையத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். நள்ளிரவு வரை இண்டிகோ விமானங்கள் இயக்கப்படாது என அறிவிக்கப்பட்டதால், பயணிகள் தவித்தனர். விமானங்களின் சேவை ரத்து செய்யப்படுவது குறித்து முறையான அறிவிப்பு வழங்கப்படவில்லை என்று பயணிகள் குற்றம்சாட்டினர்.

தலைநகர் டெல்லியில் இருந்து 225 இண்டிகோ விமானங்களின் சேவைகள் ரத்து செய்யப்பட்டன. இதேபோன்று, பெங்களூரில் 102 விமானங்கள், மும்பையில் 104 விமானங்கள், ஹைதராபாத்தில் 92 விமானங்கள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் தவித்தனர்.

சென்னை மற்றும் டெல்லி விமான நிலையங்களில் இண்டிகோ சேவை நள்ளிரவு வரை முடங்கியது. ஏர் இந்தியா, ஸ்பைஸ் ஜெட் நிறுவன விமானங்கள் மட்டுமே இயங்கியதால், விமான பயண கட்டணம் பல மடங்கு உயர்ந்தது. சென்னை கோவைக்கு 60 ஆயிரம் ரூபாய் வரை வசூலிக்கப்பட்டது. நேற்று மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விமானசேவை ரத்தான நிலையில், பயணிகளிடம் இண்டிகோ நிறுவன சிஇஓ பீட்டர் எல்பர்ஸ் மன்னிப்பு கோரினார். "நாள்தோறும் சுமார் 2,300 விமானங்களை இண்டிகோ நிறுவனம் இயக்கி வருகிறது. அதில் கிட்டத்தட்ட பாதி விமானங்களின் சேவைகள் கடந்த சில நாள்களாகவே முடங்கியுள்ளதால் இந்திய விமான போக்குவரத்து துறையில் அசாதாரண சூழல் நிலவி வருகிறது" என்று அவர் விளக்கம் அளித்தார்.

இந்த நிலையில் அதிகாலை அதிகாலை 3 மணியில் முதல் இண்டிகோ ஏர் லைன்ஸ் பயணிகள் விமான சேவை தொடங்கியது. வரும் 10ம் தேதிக்கு பிறகேஇண்டிகோவிமான சேவைகள் சீரடையும் என அந்நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது.

சென்னையில் இருந்து இன்று 10 விமானங்கள் இயக்கப்பட்ட நிலையில் படிப்படியாக விமான சேவை அதிகரிக்கப்படும் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

WANTED

THE SOUTH INDIA TIMES

Applications are invited from young, energetic, and talented correspondents, who have flair for writing reports in crisp style and are willing to accept the challenge and work sincerely to grow as a professional with the first-ever regional newspaper like The South India Times, a complete regional paper that showcases all happenings in five southern states besides elsewhere in the country as well as the world, as they unveil

Dist Correspondent &
Constituency-wise Stringers,
Sub-Editors &
Advertisement Executives.

Required Experience: Minimum 2-3 years experience in real-time media.Salary: Negotiable for the right candidates Send your resume / CV.

99122 20350
info.southindiatimes@gmail.com

### திருவண்ணாமலை

## அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தினமும் 4,000 பேர் சிகிச்சை பெறுகின்றனர்

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



திருவண்ணாமலை, டிச.07

திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தினமும் 3 முதல் 4 ஆயிரம் பேர் மருத்துவ சிகிச்சை பெறுகின்றனர்என மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

திருவண்ணாமலை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 23 கோடியே 75 லட்சம் மதிப்பில் புதிதாக தீவிர சிகிச்சை பிரிவு கட்டப்பட்டு வருகிறது. இதனை நேற்று திருவண்ணா மலைக்கு வருகை தந்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் அரசு மருத்துவமனையின் செயல்பாடுகள் குறித்து மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் மருத்துவர்களுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது அரசு மருத்துவமனையில் அளிக்கப்படும் சிகிச்சை முறைகள், மருந்து இருப்பு, நிலவரம் குறித்து கேட்டறிந்து மருத்துவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நாள் தோறும் 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் பேர்வரைசிகிச்சைபெற்று வருகின்றனர். 1500 முதல் 1800 உள் நோயாளிகளாக மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர்.இந்த மருத்துவமனையில் ஒரு மாதத்திற்கு 1500 முதல் 1800 வரை பிரசவங்கள் நடைபெற்று வருகிறது. குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு 50 முதல் 60 பிரசவங்கள் நடக்கிறது. இந்த மருத்துவமனையில் மாதத்தில் 2 அல்லது 3 நாட்கள் சுகப்பிரசவம் என்ற முறையில் பிரசவம் பார்க்கப்பட்டு மருத்துவர்கள் சாதனை படைத்து வருகின்றனர்.

ஒட்டுமொத்தமாக அரசு மருத்துவமனைகளில் சுகப்பிரசவம் என்ற முறையில் தமிழ்நாடு முன்னிலையில் இருக்க வேண்டும் என்பதற்காக ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு சிகிச்சைக்கு வரும் தாய்மார்களுக்கு யோகா பயிற்சி போன்ற பயிற்சிகள்அளிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் உள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் காலி பணியிடங்கள் இல்லாத நிலையை உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 189 டாக்டர்களுக்கு, 229 பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இந்த மருத்துவமனையில்அனைத்து பணியிடங்களும் நிரப்பப்பட்டு ள்ளது. திருவண்ணாமலை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை கட்டப்பட்டு வருகிறது. அந்தப் பணிகள் விரைவில் முடியும் தருவாயில் உள்ளது. 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைக்கான இந்த கட்டிடத்தில் 4 அறுவை சிகிச்சை அரங்குகள் மற்றும் அதிநவீன வசதியுடன் கூடிய சி.டி. ஸ்கேன்போன்றபல்வேறு வசதிகளுடன் கூடிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த மருத்துவமனையில் சுமார் 8 கோடி மதிப்பில் இருதய நோய்சிகிச்சைக்கான கேத் லேப் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அதற்கான கருவிகள் வெளிநாட்டில் இருந்து வரவழைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் நிறைவுற்ற பின் திருவண்ணாமலை மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் கேத் லேப் மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம் விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். அடுத்த கட்டமாக இந்த மருத்துவமனையில் நியூரோ பிரிவு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். மருத்துவ பயனாளிகளுக்கு தேவையான அனைத்து சிகிச்சைகளும் சிறந்த மருத்துவர்களை கொண்டு அளிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் ராம்பிரதீபன், மருத்துவக்கல்லூரி முதல்வர் மோகன் காந்தி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### கர்நாடக அரசை கண்டித்து நடைபெறவிருந்த

## திருவாரூர் ரெயில் மறியல் போராட்டம் ஒத்தி வைப்பு

### பி.ஆர். பாண்டியன் அறிவிப்பு

திருவாரூர், டிச.07–


தமிழக காவிரி விவசாயிகள்சங்கம் பொதுச்செயலாளர் பி.ஆர். பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறியதா வது:– காவிரியின் குறுக்கே மேகதாட்டு அணை கட்டுவது குறித்து கர்நாடக அரசின் சட்டவிரோத வரைவு திட்ட அறிக்கையை வரும் டிசம்பர் 8ம் தேதி நடைபெற உள்ள கா விரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் விவாதிக்க கூடாது. ராசி மணல் அணைக்கட்ட ஆணையம் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி ரயில் மறியல் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தோம். இதற்கிடையே நேற்று கல்லணைக்கு வருகை தந்த காவிரி மேலாண்மை ஆணைய தலைவர் எஸ்.கே. ஹால்தார் அவர்களை நேரில் சந்தித்து இது குறித்து கோரிக்கை மனு அளித்து விரிவாக எடுத்துரைத்தேன். அதனைப் பெற்றுக் கொண்ட ஆணைய தலைவர் காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் இனி மேகதாட்டு குறித்து விவாதிப்பதற்கு வாய்ப்பு இல்லை எனவும்,முடிந்து போன ஒன்று என தெளிவு படுத்தினார்.

கர்நாடக அரசின் வரைவு திட்ட அறிக்கையை திருப்பி அனுப்பி விட்டோம்.அடர்ந்த வனப் பகுதி மட்டுமன்றி விலங்குகள் சரணாலயம் உள்ள பகுதி என்பதால் மத்திய அரசின் வனத்துறையும் சுற்றுச்சூழல் துறையும் அனுமதி வழங்க முடியாத நிலை உள்ளது. அந்த அணை கட்டப்படுவதற்கான வருவாய் குறித்தான எந்த விபரங்களும்சமர்ப்பிக்கப்படவில்லை.எனவே இது குறித்து வரும் 8ம் தேதி கூட்டத்தில் விவாதிப்பதற்கு வாய்ப்பு இல்லை. அது முடிந்து போன ஒன்று என்றார்.மேலும் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல் குறித்த ஆணையத்திற்கு எந்த தகவலும் இதுவரையிலும் வரவில்லை எனவும் தெளிவுபடுத்தினார். மத்திய அரசின் நீர்வள ஆணையத்திற்கு மட்டுமே உச்ச நீதிமன்றம் வழிகாட்டி உள்ளது.

எனவும்,அது குறித்து ஆணையத்திற்கு சம்பந்தமில்லை எனவும் தெரிவித்தார். இனி மேகதாட்டு குறித்து ஆணையம்விவாதிப்பதற்கு வாய்ப்பு இல்லை என தெளிவாக உத்தரவாதப்படுத்தினார். இதனை அடுத்து அவரது கருத்துக்கு மதிப்பளித்து நாளை 07.12.2025ல் நடைபெற இருந்த திருவாரூர் ரயில் மறியல் போராட்டத்தை ஒத்திவைப்பது என மாநில மாவட்ட நிர்வாகிகள் கருத்தை ஏற்று ஒத்திவைக்கப்படுகிறது. அடுத்து அறிவிக்கப்படுகிற போராட்டங்களில் தொடர்ந்து ஆதரவு அளிக்க விவசாயிகள் முன்வர வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

### காஷ்மீரில் வீரமரணமடைந்த

## திருத்தணி பகுதியைச் சேர்ந்த ராணுவ வீரரின் உடல் நல்லடக்கம்



திருவள்ளூர், டிச.07

ஜம்மு–காஷ்மீரில் வீரமரணமடைந்த திருத்தணியை சேர்ந்த ராணுவ வீரரின் உடல் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

திருத்தணி அருகே சத்திரம் ஜெயபுரம் கிராமத்தைச் சேர்ந்த கன்னிவேல் என்பவரின் மகன் சக்திவேல்(30). இவர், இந்திய ராணுவத்தில் கடந்த 2018–ம் ஆண்டு பணியில் சேர்ந்து ஜம்மு–காஷ்மீரில் இந்தியா–பாகிஸ்தான் எல்லை பகுதியில் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை 11 மணியளவில், சக்திவேல் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது,ராணுவத்தினருக்கும்,தீவிரவாதிகளுக்கும் இடையே சண்டை நடைபெற்றது.

இதில், சக்திவேல் வீரமரணம் அடைந்தார். இந்த தகவல், இந்திய ராணுவம் சார்பில், சக்திவேல் குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது உடல் ஜம்மு, காஷ்மீர்ராணுவ முகாமில் இருந்து விமானம் மூலம் சென்னைக்கு கொண்டு வரப்படும். சொந்த ஊரான சத்திரம் ஜெயபுரம் வந்ததும், டிச.6–ம் தேதி குடும்பத்தினர், பொதுமக்கள் அஞ்சலி செலுத்திய பின்னர் ராணுவ மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட உள்ளது. வீரமரணம் அடைந்த சக்திவேலுக்கு மனைவி (தேவிஸ்ரீ(26)), மகள் (ஆஷிகா சௌர்லின்(4)), மகன் (லெனின் அக்ரன்(2)) உள்ளனர்.

### மகன் கொலை தடுத்த மருமகள் படுகாயம்

## தாய் விஷம் குடித்து தற்கொலை முயற்சி

### புளியங்குடி அருகே பரிதாப சம்பவம்

நெல்லை, டிச.07

புளியங்குடி அருகே மகன் கொலை செய்யப்பட்ட நிலையில், அதை தடுத்த மருமகள் படுகாயம் அடைந்தார். இதையடுத்து மகன் இறந்ததை அறிந்த தாய் விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்ற சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே உள்ள நெல்கட்டும்செவல் பச்சேரியை சேர்ந்தவர் மாடசாமி. இவரது மனைவி அழகு நாச்சியார் (70). அவர்களது மகன் சங்கரலிங்கம் (40), மருமகள்சுப்புத்தாய் (35). இந்த தம்பதியினருக்கு ஒரு மகன், மகள் உள்ளனர். மாடசாமி இறந்து விட்டதால் அழகு நாச்சியார் மகன் சங்கரலிங்கத்துடன் வசித்து வருகிறார். விவசாயியான சங்கரலிங்கத்திற்கும் அவரது உறவினர்களுக்கும் இடையே நிலத்தகராறு இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று சங்கரலிங்கம் தனது மனைவி சுப்புதாயுடன் கரிவலம்வந்தநல்லூருக்கு சென்று விட்டு இரவில் ஊருக்கு பைக்கில் திரும்பி வந்து கொண்டிருந்தனர். இதையடுத்து அவர்கள் நெல்கட்டும்செவல் அருகே உள்ள பாலம் பகுதியில் வந்தனர். அப்போது திடீரென ஒரு கும்பல் கையில் ஆயுதங்களுடன் அவர்களைவழிமறித்தது.அதை பார்த்து அதிர்ச்சியடைந்த சங்கரலிங்கம் பைக்கை நிறுத்தாமல் தப்பிக்க முயன்றார். ஆனால் அந்த கும்பல் அவர்களை சுற்றி வளைத்து அரிவாளால் சரமாரியாக வெட்டியது. இதை சுப்புத்தாய் தடுக்க முயன்றபோது அவருக்கும் அரிவாள் வெட்டு விழுந்தது. இதில் கணவன் –மனைவி இருவரும் ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்தனர். இதனை அந்த வழியாக சென்றவர்கள் பார்த்துபுளியங்குடி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சங்கரலிங்கத்தை மீட்டபோது அவர் இறந்து விட்டார் . படுகாயத்துடன் கிடந்த சுப்புதாயை மீட்டு சிகிச்சைக்காக சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் . பின்னர் அவர் மேல் சிகிச்சைக்காக பாளை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சங்கரலிங்கம் உடல் பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த சம்பவம் குறித்து புளியங்குடி போலீசார் வழக்கு பதிந்து கொலையாளிகளை தேடி வருகின்றனர். இதனிடையே சங்கரலிங்கம் இறந்த செய்தியை அறிந்த அவரது தாய் அழகுநாச்சியார் இன்று அதிகாலை விஷத்தை குடித்து மயங்கி விழுந்தார். அவரை உறவினர்கள் மீட்டு சிகிச்சைக்காக சங்கரன் கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக அவரும் பாளை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பாளை அரசு மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் மாமியார் மற்றும் மருமகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

0மகன் இறந்தது தெரிய வந்ததும் தாய் தற்கொலைக்கு முயன்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

### 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி

## நியாய விலைக்கடை பணியாளர்கள் 12–ந் தேதி சென்னையில் போராட்டம்

### திருச்சியில் நடந்த கூட்டத்தில் அறிவிப்பு

திருச்சி டிச.07

தமிழ்நாடு அரசு நியாய விலைக்கடை பணியாளர் சங்கம் சார்பில் திருச்சியில் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தலைவர் ரமேஷ் தலைமையில் நடைபெற்றது . திருவரங்கம் செல்வமணி வரவேற்றார்.

மாநில பொதுச் செயலாளர் விஸ்வநாதன் முன்னிலை வகித்தார்.மாநிலத் தலைவர் ஜெயச்சந்திர ராஜாசிறப்புரையாற்றினார்.கூட்டத்தில் நிர்வாகிகள் திருச்சி எடத்தெரு பாபு,அண்ணாதுரை,

தஞ்சை ராமலிங்கம் நடராஜன், செல்லத்துரை, மாரிமுத்து, பிச்சை பிள்ளை, சேகர், பாஸ்கர், ரமேஷ், தினேஷ் உள்பட மாநில முழுவதும் இருந்து நிர்வாகிகள்கலந்துகொண்டனர் முடிவில் மாவட்ட பொருளாளர் பொன்னர் நன்றி கூறினார்.

இதில் பொது விநியோகத் திட்டத்திற்கான தனித் துறையை உருவாக்க வேண்டும், ரேஷன் பொருட்களை பொட்டலமாக வழங்கவேண்டும் உள்ளிட்ட15அம்சகோரிக்கைகளை வலியுறுத்தி 12ந் தேதி சென்னையில் ஆளுங்கட்சியின் கூட்டணி கட்சியை சேர்ந்த தலைவர்களை அழைத்து மாபெரும் கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு பின் மாநில தலைவர் ஜெயச்சந்திரன் ராஜா நிருபர்களுக்கு பேட்டி அளித்தார் அப்போது அவர்கூறியதாவது:

கல்வித் தகுதிக்கு ஏற்ப பணியிடம் மற்றும் ஊதியம் வழங்கிட வேண்டும்,

மேலும் ஐஏஎஸ் தலைமையில் ஊதிய மாற்றக் குழு அமைத்து நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு சலுகைகள் வழங்கிட வேண்டும்,தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக இடைத்தராசும் நியாய விலை கடைகளில் உள்ள விற்பனை முனையமும் இணைத்து சரியான எடையில் அத்தியாவசிய பொருட்கள் பொட்டலமாக வழங்கப்பட வேண்டும், ரேஷன் கடைகளில் எடையாளர் நியமனம் செய்ய வேண்டும் உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நடைபெறும் இந்த போராட்டத்தில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்பார்கள்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதியமாற்றம் எனஅரசுஅறிவித்துவிட்டு தற்போதுவரை அதனை நடைமுறைப்படுத்தவில்லை, அதற்கான கமிட்டி அமைத்து ஜனவரி மாதத்திற்குள் ஊதிய உயர்வை அறிவிக்க வேண்டும், நுகர்பொருள் வாணிப கழகம் பொருள் வழங்கப்படுவதும், கூட்டுறவுதுறை சார்பில் கடை நடத்துவதும், பொருள் ஒதுக்கீடு செய்வது தமிழ்நாடு வழங்கல் துறை என மூன்று துறைகளின்கீழ் செயல்படும் நியாய விலைக்கடை துறையை தனித்துறையாக அறிவித்து மானியம் மற்றும் விளிம்பு தொகையினை கருவூலம் மூலம் வழங்கிடவேண்டும், தாயுமானவர் திட்டத்தில் எடையாளர் மற்றும் லோடுமேன்கள் நியமிக்கப்படவில்லை . லாரி வாடகையை விற்பனையாளரை கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அரசு தள்ளி விட்டது .

எனவேஇந்ததிட்டத்தில் உள்ள குறைபாடுகளை அரசு நிவர்த்தி செய்ய வேண்டும்.

வயதானவர்களுக்கு கைரேகை பதிவு செய்து பொருட்கள் வழங்குவதில் சிரமம் உள்ளதால் ஓடிபி முறையை அமல்படுத்தி பொருட்கள் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் . சென்னையில் நடைபெறும் போராட்ட தினத்தின் போது முதல்வரை சந்திக்க உள்ளோம். அதே நேரம் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றாத பட்சத்தில் மாநில செயற்குழுகூடி அடுத்தகட்ட போராட்டங்கள் நடத்துவது குறித்து அறிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### நெல்லை மாவட்டத்தில் நடந்த கொலை வழக்கில்

## 14 பேருக்கு இரட்டை ஆயுள் தண்டனை

### தென்காசி செசன்சு கோர்ட்டு உத்தரவு

நெல்லை, டிச.07–

தென்காசி நீதிமன்றத்தில் 14 பேருக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது . கொலை வழக்கில் நீதிபதியின் அதிரடி தீர்ப்பால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் பாப்பாக்குடி அருகே உள்ள காசிநாதபுரத்தில் சீவலப்பேரி சுடலை கோவிலில் சாமி கும்பிடுவது மற்றும் வரிவசூல் செய்வதில் ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக கடந்த 2015 ஆம் ஆண்டு மணிவேல் என்பவர் படுகொலைசெய்யப்பட்டார்.

இந்த வழக்கில் 17 பேர் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்த வழக்கில் 3 பேர் ஏற்கனவே இறந்து விட்டனர். தற்போது நெல்லை மாவட்டம் பிரிக்கப்பட்டு விட்டதால் காசிநாதபுரம் தென்காசி மாவட்டத்தில் உள்ளது.

இதையடுத்து இந்த வழக்கு தென்காசியில் உள்ள மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் இன்று இந்த கொலை வழக்கு தொடர்பாக நீதிபதி மனோஜ் குமார் பரபரப்பு தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கில் விநாயகம்,உலகநாதன்,சிவசுப்பிரமணியன், சுடலை ,முத்துக்குமார் ,சுப்பிரமணியன், சந்தானம், சிவன் சேட், மாரிராஜ், பிச்சையா ,வேல்துரை, கருப்பையா, ரமேஷ், பண்டாரம், மணிவேல், கலைவாணன், முத்துராஜ் ஆகியோருக்கு கொலை குற்றத்திற்கு ஒரு ஆயுள் தண்டனையும், கொலை முயற்சிக்கு ஒரு ஆயுள் தண்டனையும் என இரட்டை ஆயுள் விதிக்கப்பட்டு தனித்தனியாக அறிவித்தும் மற்ற குற்றவா ளிகள் அனைவருக்கும் தலா ரூ.41 ஆயிரம் அபராதம் விதித்தும் தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் அரசு சார்பில் வக்கீல் வேலுச்சாமி ஆஜரானார்.

கொலை வழக்கில் 14 பேருக்கு இரட்டை ஆயுள் தண்டனைவிதிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மெட்ராஸ் மணி
MADRAS MANI DAILY TAMIL PUBLISHED FROM - CHENNAI
டிச 07 2025 ஞாயிற்றுக்கிழமை

## ''இது ஒரு முதல்வர் போடுகிற பதிவா?'' - திருப்பரங்குன்றம் விவகாரத்தில் அண்ணாமலை ஆவேசம்

சென்னை: திருப்பரங்குன்றம் கார்த்திகை தீபம் விவகாரத்தில் முதல்வர் ஸ்டாலின் பதிந்த சமூக வலைதளப் பதிவைச் சுட்டிக்காட்டி, ''இது ஒரு முதல்வர் போடுகிற பதிவா?'' என்று பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை ஆவேசமாக கூறினார்.

இது குறித்து அவர் இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியது: ''திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்று 1990 காலக்கட்டத்தில் இருந்து இந்து முன்னணி போராடி வருகிறது.

தற்போது, உயர் நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதி தீபம் ஏற்றலாம் என தீர்ப்பு அளித்துள்ளார்.

இந்நிலையில், நீதிபதியின் தீர்ப்பையும் 1996, 2014,2017-ம்ஆண்டுகளில்வெளியானதீர்ப்பையும் அமைச்சர் ரகுபதி வேண்டுமென்றே திரித்து உண்மைக்கு புறம்பாக பேசியுள்ளார். 1996, 2014, 2017-ல் கோரிக்கைகள், அதன் தீர்ப்பும், தற்போதையை கோரிக்கை, தீர்ப்பும் வேறு வேறு. நீதிபதியின் தீர்ப்புக்கு ஆட்சேபனை இருந்தால், நியாயப்படி தர்காதான் முறையீடு செய்திருக்க வேண்டும். ஆனால், கோயில் செயல் அலுவலர் முறையீடு செய்திருக்கிறார். அவரை, திமுக வேண்டுமென்றே தூண்டி விட்டிருக்கிறது.

அதே நேரத்தில் காவல் துறை தங்கள் கடமையை செய்யாததால், மத்திய தொழில் பாதுகாப்புப் படை அனுப்பப்பட்டது.அவர்களைநீதிபதிஅனுப்பியதில் எந்த தவறும் இல்லை.

2005-ம் ஆண்டில் நடந்த அமைதிக் குழு பேச்சு வார்த்தையில், தர்கா இருக்கும் இடத்தில் இருந்து 15 மீட்டர்தூரத்தில்தீபம்ஏற்றலாம்எனஇஸ்லாமியர்கள் கையெழுத்திட்ட ஆவணம் இருக்கிறது.

பிரச்சினை இஸ்லாமியர்களுக்கு இல்லை. இன்று திமுக அரசு திருப்பரங்குன்றம் மலைக்கு சிக்கந்தர் மலை என பெயர் வைத்தும், ராமநாதபுரம் எம்.பி. சிக்கன் பிரியாணி சாப்பிடுவதையும், நெல்லித்தோப்பில் ஆடு வெட்டுவோம், கோழி வெட்டுவோம் என்பதையும் திமுக அரசு ரசிக்கிறது. இந்து பக்தர்களுக்கு எதிராக உச்சபட்ச அரசியலை திமுக செய்து கொண்டிருக்கிறது.

திமுக ஆட்சிக்கு வந்ததில் இருந்து 161-க்கும் மேற்பட்ட கோயில்களை இடித்திருக்கிறார்கள். சில கோயில்களை நீதிமன்றம் உத்தரவிட்டதால் இடித்தோம் என்கிறார்கள். இடித்து அப்புறப்படுத்துவதற்கு மட்டும் நீதிமன்றம் வேண்டுமாம். தீபத்தூணில் தீபம் ஏற்றுங்கள் என்றால் நீதிமன்றம் வேண்டாமாம். அதேநேரம் இதுவரை எத்தனை, சர்ச், எத்தனை மசூதிகளை இடித்திருக்கிறார்கள்?

முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதள பக்கத்தில் 'மதுரைக்கு தேவை வளர்ச்சி அரசியலா அல்லது .......... அரசியலா?'' என ஒரு பதிவு போடுகிறார். இது ஒரு முதல்வர் போடுகிற பதிவா? திருப்பரங்குன்றம் தீபத்தூணில் ஏற்றக்கூடிய தீபத்துக்காக உயிரை கொடுத்து பாஜக தொண்டர்கள் துணை நிற்பார்கள்'' என்றார் அண்ணாமலை.

முதல்வர் ஸ்டாலின் பதிவு என்ன? - முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பதிவில், ''மாமதுரைக்குத்தேவைவளர்ச்சிஅரசியலாஅல்லது ......... அரசியலா? மக்கள் முடிவு செய்வார்கள்.

மெட்ரோ ரயில், எய்ம்ஸ், புதிய தொழிற்சாலைகள் மற்றும் வேலைவாய்ப்புகள்! - இவைதான் மாமதுரையின் வளர்ச்சிக்காக அங்கு வாழும் மக்கள் கேட்பது!'' என்று கருத்து தெரிவித்துள்ளார்.

### ராஜபாளையத்தில்

## 236 கிலோ குட்கா பிடிபட்டது

ராஜபாளையம்,டிச.07–

ராஜபாளையம் வடக்கு காவல் நிலைய காவல்துறையினர் மதுரை ரோடு அன்னப்பராஜா பள்ளி எதிரே வாகன தணிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது அவ் வழியாக வந்த டெம்போ ட்ராவல் வேனை நிறுத்தி சோதனை செய்தனர். வேனில் தடை செய்யப்பட்ட குட்கா பொருள் கடத்தி வந்தது தெரிய வந்தது.

இதையடுத்து236கிலோ குட்கா பொருட்களை கைப்பற்றி தென்காசி மாவட்டம் களக்காடு பகுதியைச் சேர்ந்த ஆனந்தராசு (30) மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் கீழமங்கலம் பகுதியைச் சேர்ந்த சீனிவாசன் (30) ஆகியோரை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.

### டிச.9 முதல் 14ம் தேதி வரை

## தமிழக கடலோர மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு

திருச்சி, டிச. 07–

தனியார் வானிலை ஆய்வாளர் ந.செல் வகுமார் கூறி யதாவது: தமிழகம் கடந்து அரபிக் கடல் சென்ற தாழ்வுப் பகுதியும், காற்று சுழற்சியும் ஒன்றிணைந்து லட்சத்தீவுக்கு தெற்குப் பகுதியில் நீடிக்கிறது.

புதிதாக குமரிக் கடல் நோக்கி நகர்ந்த காற்று சுழற்சி காரணமாக தற்போது டெல்டா மாவட்டங்கள், தென் மாவட்டங்கள், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மிதமானது முதல் சற்று கனமழை வரை பொழிந்துவருகிறது.

அரபிக் கடல் தாழ்வு சுழற்சி கிழக்கு காற்றை ஈர்ப்பதன் காரணமாக வால்பாறை முதல் கன்னியா குமரி வரை மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் , திண்டுக்கல், திருப்பூர் மற்றும் தென் மாவட்டங்களின் மேற்குப் பகுதிகளிலும் நல்ல மழைப்பொழிவு உண்டு. இதே நிலை வரும் 8ம் தேதி வரை தொடரும்.

மலேசியா, தாய்லாந்து கடந்து வங்கக் கடலில் மேற்கு நோக்கி நகர்ந்து வரும் தாழ்வு நிலை வரும் 9 முதல் 14ம் தேதி வரை இலங்கை, குமரிக் கடல், தென் தமிழகம் வழியாக அரபிக்கடல் நோக்கி நகர்ந்து, செங்கல் பட்டு முதல் கன்னியா குமரி வரை அனைத்து கடலோர மாவட்டங்கள், டெல்டா மற்றும் தென் மாவட்டங்களின் உள்பகுதிகளில் மிதமானது முதல் சற்று கன மழை வரை கொடுக்கும். ஓரிரு இடங்களில் அதி கனமழைக்கும் வாய்ப்புள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### திருப்பரங்குன்றம் விவகாரம்

## இந்து மரபுகள், சடங்குகளை கேலி செய்வது வழக்கமாகிவிட்டது

### பவன் கல்யாண் கருத்து

சென்னை, டிச. 07

இந்து மரபுகள், சடங்குகளை கேலி செய்வது வழக்கமாகிவிட்டது என திருப்பரங்குன்றம் விவகாரத்தில் ஆந்திர மாநில துணை முதல்வர் பவன் கல்யாண் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதள பதிவில் கூறியிருப்பதாவது:

இன்றைக்கு நம் நாட்டில் உள்ள இந்துக்கள் தங்கள் நம்பிக்கையை பின்பற்றவும், தங்கள் சடங்குகளை செய்யவும் நீதிமன்றத்தின் தலையீட்டை நாடவேண்டியது வருத்தமாகவும், முரண்பாடாகவும் இருக்கிறது.

முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றத்தில் கார்த்திகை தீபத்தையொட்டி மலையின் மேல் தீபம் ஏற்ற, ஒரு தீர்க்கமான சட்டப்போராட்டத்தில் வெற்றி பெற்ற பிறகும், பக்தர்கள் ஒரு எளிய அமைதியான சடங்கைச் செய்ய முடியாவிட்டால், சொந்த நாட்டில் அரசியலமைப்பு நீதியை எங்கு பெறுவார்கள்.

இந்து மரபுகள் மற்றும் சடங்குகளை கேலி செய்வது சில குழுக்களுக்கு வழக்கமாகிவிட்டது. எந்த மத விழாவையும் ஒரு வாரம் தாமதமாக கொண்டாட முடியுமா, ஆனால் புனிதமான கார்த்திகை தீபம் திருடப்பட்டு மறைந்துவிட்டது. ஏனென்றால் இந்துக்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்வார்கள். ஒவ்வொரு முறையும் ஏற்படும் இழப்பை ஏற்றுக் கொண்டு சமரசம் செய்வது இந்துக்கள் தான்.

அதே மற்ற மத நிகழ்வுகளுக்கு இதையே செய்யத் துணிகிறார்களா, இந்துக்கள் சாதி, பிராந்திய மற்றும் மொழியியல் தடைகளால் பிரிக்கப்பட்டிருக்கும் வரை இந்து மதம், அதன் நடைமுறைகளுக்கு எதிரான கேலி, அவமானங்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடரும். தாங்கள் எதிர்கொள்ளும் அவமானத்தைப் பார்த்து இந்துக்கள் ஒருநாள் விழித்தெழுவார்கள் என நம்புகிறேன்.

இவ்வாறு கூறியுள்ளார்.

### பேரணாம்பட்டு வனப்பகுதியில்

## ஒரே இடத்தில் இறந்து கிடந்த 3 யானைகளுக்கு உடற்கூறு ஆய்வு

### உயர் அதிகாரிகள் தீவிர விசாரணை

பேரணாம்பட்டு, டிச.07:

பேரணாம்பட்டு வனப்பகுதியில் ஒரே இடத்தில் இறந்த 3 காட்டு யானைகளை உடற்கூறு ஆய்வு செய்த மருத்துவ குழு. வனத்துறை உயர் அதிகாரிகள் தீவிர விசாரணை.

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு வனப்பகுதி தமிழக, ஆந்திர எல்லை பகுதியில் அமைந்துள்ளது. பேரணாம்பட்டு வனச்சரகத்திற்கு உட்பட்ட தனியாருக்கு சொந்தமான சுமார் 1500 ஏக்கர் பரப்பளவு கொண்ட சாத்கர் மலைப்பகுதியில் உள்ள ஏரியின் அருகே அழுகிய நிலையில் இரண்டு பெரிய யானை, ஒரு குட்டி யானை என மூன்று யானைகளின் சடலங்கள் நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டது.

மேலும் பேரணாம்பட்டு வனச்சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 20 நாட்களில் வெவ்வேறு இடங்களில் தொடர்ந்து ஐந்து யானைகள் உயிரிழந்துள்ளது. அதன்பேரில் நேற்று தமிழ்நாட்டை சேர்ந்த வனத்துறை குழு, மருத்துவ குழு, ஆந்திராவை சேர்ந்த வனத்துறை குழு ஆகியோர் விசாரணை செய்து ஆய்வு மேற்கொண்டனர். மேலும் இறந்த யானைகளை அங்கேயே உடற்கூறு பரிசோதனை செய்து அதன் மாதிரிகளை பரிசோதனைக்காக எடுத்து சென்றனர். இது குறித்து தலைமை வன உயிரின பாதுகாப்பாளர் பெரியசாமி கூறுகையில் தற்போது மூன்று யானைகளின் உடற்கூறு பரிசோதனை முடிந்துள்ளது. மூன்று யானைகளுமே வெவ்வேறு கால கட்டத்தில் இறந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். மலைப்பகுதியில் யானைகள் உயிர் இழப்பு ஏற்பட்டு வருவது பல சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளதாகவும் அங்குள்ள தண்ணீரில் விஷம் வைத்து கொள்ளப்பட்டதா அல்லது மின்சாரம் தாக்கி உயிரிழந்ததா மின்னல் தாக்கி உயிரிழந்ததா ? நோய் தாக்கம் ஏற்பட்டிருக்குமா ? என பல சந்தேகங்கள் எழுந்துள்ளதாகவும் அதற்காகத்தான் தற்போது உடற்கூறு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் அங்குள்ள தண்ணீர் மற்றும் மண்ணை பரிசோதனைக்காக எடுத்து செல்லதாகவும் அதற்கான முடிவுகள் ஆய்வில் தெரியவரும். தொடர்ந்து யானைகளை பாதுகாக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.


**INCRED FINANCIAL SERVICES LIMITED**
**(Erstwhile Known as KKR India Financial Services Limited)**
InCred finance

அலுவலக முகவரி: எண்: 4/225, 2வது தளம், அருள் நகர் பைபாஸ் சாலை, மதுரை-625016 தமிழ்நாடு. **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி சிவமணிகண்டன்; 9171949314; Sivamanikandan.R@Incred.Com**

**பின் இணைப்பு IV-A [விதி 8(6)க்கான விதிமுறையைப் பார்க்கவும்]**
**அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு**

நிதி சொத்துக்களை பத்திரமயமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டியை அமலாக்குதல் சட்டம், 2002 இன் கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு, பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 8(6) இன் விதிமுறையுடன் படிக்கவும்.

பொதுவாக பொதுமக்களுக்கு, குறிப்பாக கடன் வாங்குபவர் (கள்) மற்றும் உத்தரவாததாரர் (கள்) ஆகியோருக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது, பாதுகாக்கப்பட்ட கடனாளிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள/வசூலிக்கப்பட்ட, இன்க்ரெட் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் எடுக்கப்பட்ட, கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து, **"எங்கே இருக்கிறதோ அப்படியே", "எங்கே இருக்கிறதோ அப்படியே" மற்றும் "எங்கே இருக்கிறதோ அங்கேயே" என்ற பொது ஏலத்தில் திங்கட்கிழமை, 22 டிசம்பர் 2025 அன்று பிற்பகல் 02:00 மணிக்கு** விற்கப்படும். இன்க்ரெட் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய **ரூ. 1,47,29,482/- (ரூபாய் ஒரு கோடி நாற்பத்தேழு லட்சத்து இருபத்தி ஒன்பது ஆயிரத்து நானூற்று எண்பத்திரண்டு மட்டும்)** மொத்த தொகையை மீட்டெடுப்பதற்காக மாலை 05:00 மணி வரை, நவம்பர் 24, 2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பின்படி, **1) சக்தி சாய் எண்டர்பிரைசஸ், 2) திரு. கார்த்திகேயன் 3) திரு. சௌந்தரராஜன்.** இருப்பு விலை **INR 1,40,52,600/- (ரூபாய் ஒரு கோடி நாற்பது லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து அறுநூறு மட்டும்)** மற்றும் ஈவுத்தொகை (EMD) **INR 14,05,260/- (ரூபாய் பதினான்கு லட்சத்து ஐந்தாயிரத்து இருநூற்று அறுபது மட்டும்)** ஆக இருக்கும். EMD டெர்னாண்ட் டிராஃப்டுடன் சொத்தை வாங்குவதற்கான சீல் செய்யப்பட்ட ஏல கோரிக்கையை இன்க்ரெட் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மாலை **6 மணி** வரை பெறுவார். **டிசம்பர் 20, 2025 சனிக்கிழமை.** சொத்தை ஆய்வு செய்ய **டிசம்பர் 18, வியாழன் முதல் டிசம்பர் 20, 2025 சனிக்கிழமை வரை** செய்யலாம். ஏலத்தின் தேதி நேரம் மற்றும் இடம் **திங்கள், டிசம்பர் 22, 2025 அன்று பிற்பகல் 02:00 மணி முதல் மாலை 05:00 மணி வரை** இன்கிரெட் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட், எண்: 477482, 4வது மாடி, கிவ்ராஜ் காம்ப்ளக்ஸ் II, நந்தனம், அண்ணா சாலை, சென்னை - 600035 என்ற முகவரியில் நடைபெறும்.

**அடமானச் சொத்தின் விளக்கம்: கிராம நத்தம் S.No.243/1A1H/1A, பட்டா எண்.3126 இல் உள்ள, புதிய S.No.243/17 இன் படி, 2624 சதுர அடி பரப்பளவு கொண்ட, திருக்குமரன் தெருவில் அமைந்துள்ள, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் தாலுகா, நந்திவரம் கிராமம், வடக்கு: 11வது மனை திரு.ராய் எழுமலைக்கு சொந்தமானது. தெற்கு: 8வது மனை கிழக்கு: 20 அடி அகல பாதை. மேற்கு: வீடு திரு. குப்புசாமி நாயுடுவுக்கு சொந்தமானது. அளவு: வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்கு: 44 1½ அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்கு: 43% அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்கு: 60 அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்கு: 59 அடி. கூடுவாஞ்சேரி துணைப் பதிவு மாவட்டத்திலும், தெற்கு சென்னையின் பதிவு மாவட்டத்திலும் அமைந்துள்ளது.**

பூமியுடன் இணைக்கப்பட்ட அல்லது பூமியுடன் இணைக்கப்பட்ட எதனுடனும் நிரந்தரமாக இணைக்கப்பட்ட அனைத்து கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளுடன் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் மற்றும் அனைத்து எளிதான/முக்கிய உரிமைகள். விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, **இன்க்ரெட் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்டின்** இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும், அதாவது **https://www.incred.com/Auction_Notices.html**

தேதி: 07.12.2025
இடம்: சென்னை. தமிழ்நாடு

எஸ்டி/ (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
இன்க்ரெட் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு


### மது பாட்டில்கள் கடத்தியவர் கைது

## 100 மது பாட்டில்கள் பறிமுதல்

கூடலூர், டிச. 07

தேனி மாவட்டம் கூடலூர் அருகே அனுமதியின்றி டாஸ்மாக் மதுபான பாட்டில்கள் கடத்திச் சென்றவரை போலீசார் கைது செய்தனர். தேனி மாவட்டம் கூடலூர் அருகே உள்ள, கருநாக்க முத்தன்பட்டி சுருளிப்பட்டி பிரிவு பகுதியில், ராயப்பன்பட்டி சப் இன்ஸ்பெக்டர் கண்ணன் தலைமையில் போலீசார் மதுவிலக்கு தடுப்பு சம்பந்தமாக நேற்று ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அவழியாக, இரு சக்கர வாகனத்தில் வந்த ஒருவரை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி விசாரித்தனர். அவர் முன்னுக்குப் பின் முரணாக பதில் கூறியதால் அவரது வாகனத்தில் இருந்த பையை போலீசார் சோதனை செய்தனர். அப்போது அதில் அரசு டாஸ்மாக் மதுபான கடைகளில் விற்கப்படும் 180 மில்லி அளவுள்ள 100 மது பாட்டில்கள் அனுமதியின்றி அவர் கடத்திச்செல்வது தெரிய வந்தது.

இதை அடுத்து போலீசார் அவரிடம் நடத்திய விசாரணையில், அவர், கருநாக்கமுத்தன்பட்டி நடுத்தெருவைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் சிவனந்தன் (29) என்பதும், மது பாட்டில்களை அனுமதியின்றி லாப நோக்கோடு அதிக விலைக்கு விற்பனை செய்ய கொண்டு சென்றதும் தெரிய வந்தது.

இதை அடுத்து மது பாட்டில்களையும் இருசக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்த போலீசார்கள் சிவனந்தன்மீதுவழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

### ராமேஸ்வரம் தங்கச்சிமடத்தில்

## ராமநாதபுரம், புதுக்கோட்டை தஞ்சாவூர் மாவட்ட மீனவர்களின் அவசர ஆலோசனை கூட்டம்

### முக்கிய பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டது



ராமேஸ்வரம்,டிச.07–

நாகை காரைக்கால் பகுதியை சேர்ந்த ஆழ்கடல் மீன்பிடி படகில் மீன்பிடிக்கும் மீனவர்கள் மன்னர் வளைகுடா பாக்ஜலசந்தி கடல் பகுதியில் தங்கு கடலில் தங்கி ஒரு வாரம் பத்து நாள் என மீன்பிடிப்பதால் ராமநாதபுரம் தஞ்சாவூர் புதுக்கோட்டை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் .

நாகை காரைக்கால் மீனவர்கள் மீன்பிடிப்பதை தடுத்து நிறுத்த அரசுக்கு பலமுறை கோரிக்கை வைத்தும் தமிழக அரசும் பாண்டிச்சேரி அரசும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் இனிவரும் காலங்களில் தேதி அறிவிக்காமல் நாகை காரைக்கால் மீனவர்கள் தங்கு கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்பொழுது ராமநாதபுரம் புதுக் கோட்டை தஞ்சாவூர் மாவட்ட நாட்டுப் படகு மற்றும் விசைப்படகு மீனவர்கள் திடீரென கடலுக்குள் சென்று தங்கு கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களை தடுத்து நிறுத்தி சிறை பிடித்து அவர்களை கரைக்கு அழைத்து வந்து மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைப்பது என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

ஒருபுறம் இலங்கை கடற்படை பிரச்சினை மறுபுறம் நாகை காரைக்கால் மீனவர்களின் பிரச்சனை என மூன்று மாவட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் இதனால் முழுமையாக பாதிக்கப்படுவதால் தமிழக அரசு இதற்கு கவனம் செலுத்தி தங்கு கடலில் மீன் பிடிக்கும் நாகை காரைக்கால் மீனவர்களுக்கு அனுமதி வழங்குவதை ரத்து செய்ய வேண்டும். ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு அனுமதி வாங்கி விட்டு மன்னார் வலை குடா பாக் நீரணைப் பகுதிகளில் கரையோரங்களில் மீன் பிடிக்கும் நாகை காரைக்கால் மீனவர்களால் நாட்டுப் படகு மீனவர்கள் வலைகள் அறுக்கப்பட்டு படகு சேதம் அடைந்து வாழ்வாதாரம் இழந்து தவிப்பதாகவும் .

இந்த பிரச்சனையை முற்றிலுமாக நிறுத்திடும் நோக்கில் நாகை காரைக்கால் மீனவர்களை நாட்டுப்படகு மற்றும் விசைப்படகு மீனவர்கள் தடுத்து நிறுத்த அவர்களின் படகுகளை பிடித்து கரைக்கு கொண்டு வருவது என தீர்மானம் நிறைவேற்றி யுள்ளோம் என இது குறித்து எந்த பிரச்சனை வந்தாலும் அதனை சமாளிக்க விசைப்படகு மீனவர்கள் தயார் நிலையில் உள்ளதாக ராமேஸ்வரம் விசைப்படகு மீனவ சங்க தலைவர் எமரிட் கூறினார்.


MANAPPURAM HOME FINANCE LTD.

**மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்.**
முன்னர் மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்.
**CIN: U65923K12010PIC0039179**, யூனிட் 301-315, 3வது தளம், A விங், கனகியா வால் ஸ்ட்ரீட், அந்தேரிகுர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை - 400093

**கோரிக்கை அறிவிப்பு**

அதே நேரத்தில் மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, IV/470A (பழையது) இல் 638A (புதியது), மணப்புரம் ஹவுஸ், வலப்பாடு, திருச்சூர், கேரளா-680567 இல் எங்கள் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும், இந்தியாவின் பல்வேறு இடங்களில் (இனிமேல் "MAHOFIN" என்று குறிப்பிடப்படுகிறது) கிளைகளையும் கொண்டவர், 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனம் மற்றும் நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டத்தின் பிரிவு 2 இன் துணைப்பிரிவு (1) இன் பிரிவு (m) இன் துணைப்பிரிவு (iv) இன் அர்த்தத்திற்குள் ஒரு நிதி நிறுவனம் ஆகும். 2002 (இனிமேல் சட்டம் என்று குறிப்பிடப்படுகிறது) டிசம்பர் 18, 2015 தேதியிட்ட அறிவிப்பு எண். S.O. 3466 (E) உடன் படிக்கப்பட்டது. இந்திய அரசு, நிதி சேவைகள் துறை, நிதி அமைச்சகம், புது தில்லி, குடியிருப்பு அலகுகளை நிர்மாணித்தல் மற்றும்/அல்லது வாங்குவதற்கான கடன்களை முன்பணம் செலுத்தும் தொழிலை மேற்கொண்டு வருகிறது. மேலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் நெடுவரிசை எண். 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன் வாங்குபவர்/இணை கடன் வாங்குபவர்கள் MAHOFIN இலிருந்து கடன் பெற்றனர். MAHOFN SARFAESI சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட கடனாளியாக இருந்து, 2002 ஆம் ஆண்டு பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகளின் விதி 2 உடன் படிக்கப்பட்ட சட்டத்தின் பிரிவு 13(2) இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன் வாங்குபவர்கள்/இணை கடன் வாங்குபவர்கள் அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கூடுதல் வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டது, ஆனால் பல்வேறு காரணங்களுக்காக அவர்களில் சிலருக்கு அறிவிப்புகளை வழங்க முடியவில்லை. கீழே பட்டியலிடப்பட்டுள்ள மேற்கூறிய கடன் வாங்குபவர்களின் தகவலுக்காக, மேற்கூறிய கடன் வாங்குபவர்களுக்கு இந்தப் பொது அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

| சர். எண் | கடன் வாங்குபவர்/ இணை கடன் வாங்குபவர்/LAN/ கிளையின் பெயர் | எந்த வட்டி உருவாக்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்த வரையில் பாதுகாக்கப்பட்ட சொத்தின் விளக்கம் | NPA தேதி | அறிவிப்பு அனுப்பிய தேதி மற்றும் நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஆனந்தி ஏ. மாடசாமி சி/ விபிலி00020021004/ மதுரை | 986 சதுர அடி நிலம், கதவு எண். 87/6, திம்மரசநாயக்கனூர் ஊராட்சி எல்லை, சர்வே எண். 712, திம்மரசநாயக்கனூர் கிராமம், ஆண்டிபட்டி தாலுக்கா, தேனி மாவட்டம், தமிழ்நாடு, பின்: 625536. கிழக்குதெரு, மேற்குதெருவைச் சேர்ந்தது. முத்துப்பாண்டிக்கு சொந்தமானது, வடக்குநிலம் சி.மாடசாமிக்கு சொந்தமானது | 12-11-2025 | 14-11-2025 & ரூ.505214/- |
| 2 | லட்சுமிதேவி டி ராஜேஷ் டி/ விபிலி00160029601/ திருநெல்வேலி | 1050 சதுர அடி பரப்பளவு, நத்தம் எஸ் எண். 829, மன்வாரிபட்டா எண். 350, நத்தம் எஸ் எண். 873/49, 25வது வார்டு, ஜவஹர் தெரு, சிதம்பரபுரம், பாலகுளம் கிராமம், நாங்குனேரி தாலுகா, திருநெல்வேலி மாவட்டம் தமிழ்நாடு, பின்: 627501. கிழக்குதளம் அப்பாதுரைக்கு சொந்தமானது, மேற்குபொதுவழிப் பாதை - வீடு புஸ்பராஜுக்கு சொந்தமானது, தெற்குவீடு சித்தபரலிங்கத்திற்கு சொந்தமானது, வடக்குபொதுவழிப் பாதை | 12-11-2025 | 14-11-2025 & ரூ.428238/- |
| 3 | ஆவுடையம்மாள் எம், முருகன் அ/ விபிலி00160023259/ திருநெல்வேலி | கதவு எண். 48/4, 1306.25 சதுர அடி பரப்பளவு, நத்தம் ச.எண். 26/1, தென்திருப்பூவனம் கிராமம், சேரன்மஹாதேவி தாலுக்கா, திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு, பின்: 627426. கிழக்குதளம் அத்திமூலத்தேவர், மேற்குத் தெரு, மேற்குத் தெரு, வ.ஈ. வடக்குத் தலம் சுப்பையா தேவருக்கு சொந்தமானது | 12-11-2025 | 14-11-2025 & ரூ.300825/- |
| 4 | பொன்னம்பலம் எஸ். முருகேஸ்வரி பி வைகுண்ட ராஜா ஆர்/ NLAP0016033535/ திருநெல்வேலி | டி எண்.6/55பி, 1231. 39 சதுர அடி., அய்யன்புஞ்சா எஸ் எண்.224/3பியில், புதிய அய்யன்புஞ்சா எஸ் எண்.224/3பி/9சி படி, துணைப்பிரிவு அய்யன்புஞ்சா எஸ். எண். 224/381A இன்படி, வார்டு 6, டி.அம்பதார் தெரு, கொடியகேல் அம்பதார் தெரு, கொடியகேல் அம்பதார் தெரு, கே. Dt. திருநெல்வேலி, தமிழ்நாடு, பின்: 627415. கிழக்கு நிலம் கலாவுக்குச் சொந்தமானது, மேற்குவீடு கணேஷனுக்குச் சொந்தமானது, தெற்கு வீடு கிருஷ்ணமூர்த்திக்குச் சொந்தமானது, வடக்கு10 அடி கிழக்கு மேற்கு பாதை | 12-11-2025 | 15-11-2025 & ரூ.942087/- |

எனவே, மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி, கடன் வாங்குபவர்கள் / இணை கடன் வாங்குபவர்களுக்கு அறிவிப்பு வழங்கப்படுகிறது, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள், மேலே காட்டப்பட்டுள்ளபடி மொத்த நிலுவைத் தொகையை அந்தந்த கடன் வாங்குபவர் / இணை கடன் வாங்குபவருக்கு எதிராக செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறது. தொடர்புடைய கடன் வாங்குபவர் / இணை கடன் வாங்குபவர், மொத்த நிலுவைத் தொகையையும் கூடுதல் வட்டியுடன் செலுத்தத் தவறினால், மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி சொத்துக்கள் மீது பாதுகாப்பு வட்டியை அமல்படுத்துவதற்கு MAHOFIN பிரிவு 13(4) இன் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும், மேலும் சட்டம் மற்றும் இங்கு உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட பிற வழிகளில் அறிவிப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. SARFAESI சட்டத்தின் பிரிவு 13(8) இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, பொது ஏலத்திற்கான அறிவிப்பு அல்லது விற்பனை மூலம் மாற்றுவதற்கான தனியார் ஒப்பந்தத்திற்கான அறிவிப்பு வெளியிடப்படும் தேதிக்கு முன்னர் எந்த நேரத்திலும் MAHOFIN ஆல் ஏற்படும் செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகளுடன் சேர்த்து முழுத் தொகையையும் செலுத்தியவுடன், மேற்கூறிய அடமானத்தை மீட்டெடுக்க முடியும் என்பதை உங்களுக்கு அறிவிக்கிறோம். SARFAESI சட்டத்தின் S-13 (13) இன் அடிப்படையில், நீங்கள் பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை விற்பனை, குத்தகை அல்லது வேறு எந்த வகையிலும் மாற்றுவதில் இருந்து மற்றும்/அல்லது கையாள்வதில் இருந்து இதன் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை நினைவில் கொள்க.

தேதி: 08/12/2025, இடம்: தமிழ்நாடு — எஸ்டி/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்


### மதுரை அருகே

## விஷப்பூச்சி கடித்து முதியவர் சாவு

மதுரை டிச. 07 .

மதுரை அருகே கருமாத்தூர் முத்து நகரை சேர்ந்தவர் சின்னான் (64 ).இவர் வீட்டில் இருந்தபோது விஷப்பூச்சி ஒன்று அவரை கடித்துவிட்டது. இதனால் போராடிய நிலையில் அவருக்கு உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காகமதுரைஅரசுமருத்துவமனையில்சேர்த்தனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இது குறித்து செக்கானூரணி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற அனுமதி மறுப்பு

## தமிழகம் முழுவதும் இன்று கண்டன ஆர்ப்பாட்டம்

### இந்து முன்னணி மாநிலத்தலைவர் அறிவிப்பு



திருப்பூர், டிச. 07

திருப்பரங்குன்றம் தீபத் தூணில் தீபம் ஏற்ற வலியுறுத்தி தமிழகம் முழுவதும் நாளை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று இந்து முன்னணி மாநிலத்தலைவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கடந்த 2 நாட்களாக தமிழக அரசு மக்களின் பக்தியை அவமதித்து வருகிறது. உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும், அதை சிறிது கூட மதிக்காமலும், அரசியல் சாசனத்துக்கு எதிராகவும் காவல் துறை செயல்பட்டு வருகிறது. நீதிமன்ற உத்தரவை மதிக்காமல், தீபம் ஏற்றுவதற்கு முட்டுக்கட்டை போடுவது காவல் துறையின் கடமை தவறிய நடவடிக்கையாகும்.திருப்பரங்குன்றம்மலைமீதுகோயில் நிர்வாகம் தீபம் ஏற்ற 1996–ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. 2014–ஆம் ஆண்டு நீதிமன்றம் மலை மீது எங்கும் தீபம் ஏற்றலாம் என்று தெரிவித்தது. 2015–ஆம் ஆண்டு தர்ஹா நிர்வாகம், தீபம் ஏற்ப ஆட்சேபனை இல்லை என நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்தாத அறநிலையத்துறையை எதிர்த்துதான் இப்போது வழக்கு நடந்து, அதில் தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.

நீதிமன்ற விஷயத்தில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தவறான தகவலைத் தெரிவிக்கிறார். நாங்கள் மதக் கலவரத்தை தூண்டவில்லை. அங்கு எழுந்த சலசலப்புக்கும் போலீசார்தான் காரணம்.

சட்டம்–ஒழுங்கு மோசமாக உள்ளது. அதை மறைக்கவே, திருப்பரங்குன்றம் விவகாரத்தை அரசு கையில் எடுத்துள்ளது. இதைக் கண்டித்தும், திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற வலியுறுத்தியும் நாளை (டிச.7) அனைத்து மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.


**ICICI Home Finance**

**கார்ப்பரேட் அலுவலகம்:** ஐசிஜசிஜ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ஐசிஜசிஜ எச்எஃப்சி டவர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400059, இந்தியா

**கிளை அலுவலகம்:** லயன் ஆர்கேட், 1ஏ, 1வது தளம், மதுரை சாலை, மேற்குத் தெரு, சிந்துபூந்தரை, திருநெல்வேலி - 627001

[விதி 8(6)க்கான விதிமுறையைப் பார்க்கவும்] அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

நிதி சொத்துக்களை பத்திரப்படுத்துதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 இன் கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு, பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 8(6) இன் விதிமுறையுடன் படிக்கவும்.

பொதுமக்களுக்கு, குறிப்பாக கடன் வாங்குபவர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது, கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து, பாதுகாக்கப்பட்ட கடனாளியிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது/வசூலிக்கப்பட்டுள்ளது, அதன் உரிமை ஐசிஜசிஜ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் எடுக்கப்பட்டுள்ளது, இது கீழே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி, "எங்கு இருக்கிறதோ அப்படியே", "இருப்பது அப்படியே" மற்றும் "எது இருக்கிறதோ அப்படியே" என்ற வகையில் விற்கப்படும்;

| வ எண் | கடன் வாங்குபவர்(கள்)/ இணை கடன் வாங்குபவர்கள்/ உத்தரவாததாரர்கள்/ சட்ட வாரிசுகளின் பெயர். கடன் கணக்கு எண். | தெரிந்த வில்லங்கங்களுடன் பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரங்கள், ஏதேனும் இருந்தால் | நிலுவையில் உள்ள தொகை | இருப்பு விலை / எர்னஸ்ட் பண வைப்பு | சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம் | ஏல தேதி மற்றும் நேரம் | ஏல தேதிக்கு ஒரு நாள் முன்பு | சர்ஃபேசி நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (உ) | (ஊ) | (எ) | (ஏ) | (ஐ) |
| 1. | எம். சோமசேகரன் (கடன் வாங்கியவர்) என்.கே. தன்யா (இணை கடன் வாங்கியவர்) லேன் எண். லிபிஜிகூஜி100001498192 | புதிய கதவு எண் 15 38 பெட்சிபாரி சாலை குலசேகரம் கன்னியாகுமரி 629161 நா ரி சர்வே எண் 449 9கி திருநெல்வேலி தமிழ்நாடு 627113 | ரூ. 43,97, 315.22/- டிசம்பர் 04, 2025 | ரூ. 1,09, 59,300/- / ரூ. 10,95, 930/- | டிசம்பர் 30, 2025 காலை 11:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை | ஜனவரி 08, 2026 பிற்பகல் 02:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை | ஜனவரி 07, 2026 பிற்பகல் 05:00 மணிக்கு முன் | குறியீட்டு உடைமை |

ஆன்லைன் ஏலம் எங்கள் ஏல நிறுவனமான வேல்யூ டிரஸ்ட் கேபிடல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளத்தில் (URL இணைப்பு https://BidDeal.in) நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிப்பாளர்களுக்கு ஜனவரி 07, 2026 மாலை 05:00 மணிக்கு முன் கூடுதல் வட்டியுடன் மொத்த நிலுவைத் தொகையை செலுத்த கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது, இல்லையெனில் இந்த பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் மேற்கண்ட அட்டவணையின்படி விற்கப்படும்.

வருங்கால ஏலதாரர்(கள்) ஜனவரி 07, 2026 அன்று அல்லது அதற்கு முன்னர் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஜசிஜ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கிளை அலுவலக முகவரியில் ஈவானண்ட் பண வைப்புத்தொகை (EMD) RTGS/ டிமாண்ட் டிராஃப்டை (DD) (பத்தி E ஐப் பார்க்கவும்) சமர்ப்பிக்க வேண்டும். வருங்கால ஏலதாரர்(கள்) ஜனவரி 07, 2026 அன்று அல்லது அதற்கு முன்னர் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதிவு படிவம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்தின் கையொப்பமிடப்பட்ட நகலை ஐசிஜசிஜ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கிளை அலுவலக முகவரியில் ஜனவரி 07, 2026 அன்று அல்லது அதற்கு முன்னர் மாலை 05:00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். ஈவானண்ட் பண வைப்புத்தொகை டிமாண்ட் டிராஃப்டை (DD) தேசியமயமாக்கப்பட்ட/திட்டமிடப்பட்ட வங்கியிலிருந்து "ஐசிஜசிஜ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ஏலம்" என்ற பெயரில் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிளை அலுவலக முகவரியில் செலுத்தப்பட வேண்டும். ஆய்வு, ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது டெண்டர்களை சமர்ப்பித்தல் தொடர்பான கூடுதல் விளக்கங்களுக்கு, தயவுசெய்து 9920807300 என்ற எண்ணில் ஐசிஜசிஜ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டைத் தொடர்பு கொள்ளவும்.

மேலும் எந்த காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்க அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு உரிமை உண்டு. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவுசெய்து https://www.icicihfc.com ஐப் பார்வையிடவும்.

தேதி: டிசம்பர் 07, 2025
இடம்: திருநெல்வேலி

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, "ஐசிஜசிஜ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்",
CIN எண்: U65922MH1999PLC120106


### ராஜபாளையம் அருகே

## வீட்டிற்குள் அத்துமீறி புகுந்த இளைஞருக்கு சிறை

ராஜபாளையம், டிச.07

ராஜபாளையம் அருகே முகவூர் பகுதியைச் சேர்ந்தவர் கருப்பாயி (40). இவருக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

அதில் மூத்த மகள் பள்ளியில் படிக்கும் போது பால விநாயகர் கோவில் தெருவைச் சேர்ந்த லிங்கராஜ் மகன் இளஞ்சேரன் (21) பின்தொடர்ந்து தொந்தரவளித்தாகவும், அப்போது அவரது பெற்றோரிடம் கூறி கண்டித்ததாகவும் சொல்லப்படுகிறது.

இந்நிலையில் மூத்த மகளுக்கு திருமணம் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

சற்றும் எதிர்பார்க்காத நிலையில் கையில் அரிவாளுடன் வீட்டிற்குள் புகுந்த இளஞ்சோரன் அவளுக்கு வேறொரு இடத்தில் மாப்பிளை பார்த்தால் கண்டதுண்டமாக வெட்டி கொன்றுவிடுவேன் என்று கூறி மரக்கதவில் வெட்டியதுடன் கருப்பாயம்மாளை தாக்கிவுள்ளார்.

பிள்ளைகள் சத்தம் போடவும் கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து சென்றுள்ளார்.

இது குறித்து தளவாய்புரம் காவல் நிலையத்தில் கருப்பாயி புகார் அளித்தார்.

புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து இளஞ்சோரனை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

### நாசரேத் அருகே

## காரில் கடத்திய ரூ.5 லட்சம் மதிப்புள்ள புகையிலை பறிமுதல்

### வாலிபர் கைது

நாசரேத் டிச.07

நாசரேத் அருகே காரில் கடத்திய ரூ.5 லட்சம் மதிப்புள்ள புகையிலை பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக வாலிபரை போலீசார் கைது செய்தனர்.

தூத்துக்குடி மாவட்டம் நாசரேத் போலீஸ் இன்ஸ்பெக்டர் வனசுந்தர் தலைமையில் போலீஸ் சப்_ இன்ஸ்பெக்டர் சுந்தரம், சிறப்பு சப்_ இன்ஸ்பெக்டர் ஐசக் மகாராஜா, தலைமை காவலர் நாராயணன், முதல் நிலை காவலர் அந்தோணி, காவலர் சாமுவேல்ராஜ் மற்றும் போலீசார் நாசரேத் அருகே உள்ள வெள்ளமடம் விலக்கு பகுதியில் ( வியாழக்கிழமை) மாலையில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது காரில் வந்த நபரை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி சோதனை நடத்தினர். இதில் அந்த நபர் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்ப னைக்காக பதுக்கி எடுத்து செல்வது தெரியவந்தது. விசாரணையில் அவர் சாத்தான்குளம் அருகே உள்ள பேய்குளம் _ தேர்கன்குளம் தெற்கு தெருவைச்சேர்ந்த ராமசாமி மகன் பச்சமால் ( 27) என்பது தெரியவந்தது.இதையடுத்து பச்சமாலை போலீசார் கைது செய்து சாத்தான்குளம் கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தினர்.அவரிடம் இருந்த ரூ.5 லட்சம் மதிப்புள்ள புகையிலை பொருட்கள் மற்றும் காரை போலீசார் பறிமுதல் செய்தனர்.


**Mahindra FINANCE**

**பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்:** கேட்வே கட்டிடம், அப்பல்லோ பந்தர், மும்பை - 400 001. **கார்ப்பரேட் அலுவலகம்:** பி விங், 3வது தளம், அகஸ்திய கார்ப்பரேட் பார்க், பிரமல் அமிதி கட்டிடம், கமானி ஜங்ஷன், குர்லா மேற்கு மும்பை - 400 070.

அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு [சர்பாசி சட்டத்தின் விதி 9(1) உடன் படிக்கப்பட்ட விதி 8(6) இன் கீழ்]

**நிதி சொத்துக்களின் பத்திரப்படுத்துதல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 ("சர்பாசி சட்டம்") இன் கீழ் வங்கிக்கு வசூலிக்கப்படும் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு, பாதுகாப்பு வட்டி (அமுலாக்க) விதிகள், 2002 ("விதிகள்") இன் விதி 8(6) உடன் படிக்கப்பட்ட விதி 8(6) உடன் படிக்கப்பட்ட வங்கிக்கு வசூலிக்கப்படுகிறது**

பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. பொதுவாகவும், குறிப்பாக கடன் வாங்குபவர், உத்தரவாததாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு, **மஹிந்திரா அண்ட் மஹிந்திரா ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் ("பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குபவர்/NBFC")** நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்ட/வசூலிக்கப்பட்ட (கூட்டாக **"சொத்து"** என்று குறிப்பிடப்படுகிறது), கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி, SARFAESI சட்டத்தின் பிரிவு 13(4) இன் கீழ் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அதன் உடைமை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது, விதிகளின் 8 மற்றும் 9 இன் கீழ் விவரிக்கப்பட்டுள்ளபடி, வங்கியின் நிலுவைத் தொகை மற்றும் வட்டியை வசூலிக்க, தேதியில் **"எங்கே உள்ளது", "எது உள்ளதோ அது அப்படியே உள்ளது", "எது இருந்தாலும்" மற்றும் "எதுவும் இல்லாமல்"** விற்கப்படும். கீழே உள்ள மின்ஏல அட்டவணையின்படி ஏலங்களை அழைப்பதன் மூலம் வங்கியின் நிலுவைத் தொகை மற்றும் வட்டியை வசூலிக்க:

**கட்சிகள், நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைகள் மற்றும் சொத்து பற்றிய சுருக்கமான விளக்கம்**

| கடன் வாங்குபவர் மற்றும் அடமானதாரர்(கள்) பெயர் | கோரிக்கை தொகை, கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் உடைமை அறிவிப்பு தேதி | சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம் | ஏலங்களை ஆவணங்களுடன் பெறுவதற்கான கடைசி தேதி | மின்னணு ஏலத்தின் தேதி மற்றும் நேரம் | RP, EMD & BIA | அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் பெயர், தொடர்பு எண் & மின்னஞ்சல் ஐடி |
|---|---|---|---|---|---|---|
| 1. **M/S. டால்மோர் ஃபேஷன்** (கடன் வாங்கியவர்) 2. **திருமதி சசிரேகா தியாகராஜன்** (இணை கடன் வாங்கியவர் 1) & (அடமானதாரர்) 3. **திரு. தியாகராஜன் மதுராஜு** (இணை கடன் வாங்கியவர் 2) | **ரூ. 44,08,709.61/-**(ரூபாய் நாற்பத்து நான்கு லட்சத்து எட்டாயிரத்து எழுநூற்று ஒன்பது மற்றும் அறுபத்தொரு பைசா மட்டும்) 2024 செப்டம்பர் 6 ஆம் தேதி நிலவரப்படி 13(2) **கோரிக்கை அறிவிப்பு தேதி**: 07.10.2024. **உடைமை தேதி**: 21.06.2025. | 15.12.2025 முதல் 19.12.2025 வரை காலை 11:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை | 24.12.2025 | **மின்னணு ஏல தேதி:** 26.12.2025 **மின்னணு ஏல நேரம்:** காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை | **முன்பதிவு விலை:** **ரூ. 35,00,000/-** (ரூபாய் முப்பது ஐந்து லட்சம் மட்டும்) **முன்பதிவு வைப்புத்தொகை:** **ரூ. 3,50,000/-** (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) **ஏல அதிகரிப்பு தொகை:** ரூ. 10,000/-(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) | திரு. அஜயன் எஸ் ஆர் +91 9645105696 ajayan.sr@mahindrafinance.com. திரு. சீமா ரெட்டி +9949302540 ceema.reddy@mahindrafinance.com. திருமதி தீபிகா சாயராம் +91 9445679445 .deepika.sayeraam@mahindrafinance.com திரு. வரத் பார்னுகே +91 8097185044 varad.bharnuke@mahindrafinance.com. |

**சொத்து விவரங்கள் பொருள் எண்.I-**அனைத்து பகுதிகளும் பிளாட் எண். 306 கிழக்குப் பகுதி, பழைய பகுதி எண். 459, புதிய பகுதி எண். 45/3A/1A/1A இல் அமைந்துள்ளன, 1200 சதுர அடி பரப்பளவு கொண்டவை, ஸ்ரீ பாலாஜி நகர், முத்தனம்பாளையம் கிராமம், திருப்பூர் தெற்கு தாலுகா, திருப்பூர் ஜியோண்ட் 1 SRO, திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு 641605 இல் அமைந்துள்ளது. **பின்வருமாறு எல்லைகள்: கிழக்கு நோக்கி அல்லது நோக்கி**: தள எண்.306 இன் மேற்குப் பகுதி தேவ்ராஜுக்குச் சொந்தமானது. **மேற்கில் அல்லது நோக்கி**: தள எண்.305 நிகிலாவுக்குச் சொந்தமானது, **தெற்கில் அல்லது நோக்கி** : 25 அடி அகலம் கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை, **வடக்கு நோக்கி** : தள எண்.320.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, https://www.mahindrafinance.com/sme-loans/auction-notices என்றஇணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளவும் - மின்ஏல வழிகாட்டுதலுக்கு தொடர்பு கொள்ளவும் திரு. பாலாஜி மன்னூர், மொப் எண்: 7977701080, மின்னஞ்சல்: Mannur.govindarajan@c1india.com.

தேதி: 07.12.2025 | இடம்: திருப்பூர், தமிழ்நாடு — எஸ்டி/- அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர், மஹிந்திரா அண்ட் மஹிந்திரா ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்.

திருவண்ணாமலையில்

# ஒரு லட்சம் பேர் கலந்து கொள்ளும் மண்டல இளைஞரணி நிகழ்ச்சி

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்



**திருவண்ணாமலை,டிச.07**

திருவண்ணாமலையில் ஒரு லட்சம் பேர் கலந்து கொள்ளும் மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற உள்ளது என துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் திருவண்ணாமலை மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனைகளை வழங்கினார்.

கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய துணை முதலமைச்சர் திருவண்ணாமலையில் 91 சட்டமன்றத் தொகுதிகளை சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. திமுக இளைஞர் அணியில் மாவட்ட, மாநகர, ஒன்றிய அளவில் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதிக அளவில் இளைஞர்கள் திமுகவில் இணைந்து வருவதால் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக வார்டு மற்றும் பூத் அளவில் இளைஞர் அணி நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். ஒரு தொகுதிக்கு சுமார் ஆயிரம் முதல் 1300 நிர்வாகிகள் வரை நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள்.

இந்த பணிகள் நிறைவு பெற்றவுடன் தமிழ்நாட்டில் உள்ள திமுக இளைஞர் அணி நிர்வாகிகளின் எண்ணிக்கை 5 லட்சமாக இருக்கும்.

இந்தியாவில் எந்த கட்சியிலும் இளைஞர் அணி நிர்வாகிகள் 5 லட்சம் பேர் இல்லை.

திருவண்ணாமலையில் நடைபெற உள்ள மண்டல இளைஞர் அணி சந்திப்பு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருவண்ணாமலை மாவட்ட செயலாளரும், அமைச்சருமான அண்ணன் எ.வ.வேலு சிறப்பான முறையில் செய்து வருகிறார்.

இந்த சந்திப்பு நிகழ்ச்சியில் 91 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த ஒரு லட்சத்து முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளனர். இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ள திடலை பார்வையிட்டோம்.

இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு என்பது ஒரு மாநாடு போல் நடைபெற உள்ளது.

2024 ஆம் ஆண்டு சேலத்தில் இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

மாநாட்டிற்கு பிறகு வந்த நாடாளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணி 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றது.

சில தினங்களில் திருவண்ணாமலையில் நடைபெற உள்ள இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி 2026 சட்டமன்ற தேர்தலில் திமுகவின் வெற்றியை உறுதி செய்யும் விதமாக அமையும்.

தமிழ்நாட்டில் மதத்தின் பெயரால் குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்று நினைப்பவர்களின் ஆசை நிறைவேறாது. இது திராவிட மண், தமிழ் மண், இங்கு குழப்பம் ஏற்பட அரசு அனுமதிக்காது.

தமிழ்நாட்டு மக்களும் குழப்பம் ஏற்படுவதை விரும்ப மாட்டார்கள் என துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ராஜேந்திரன், மாநில மருத்துவர் அணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, அம்பேத்குமார், முன்னாள் நகர மன்ற தலைவர் இரா.ஸ்ரீதரன், சீனியர் தடகள சங்க மாநில துணை தலைவர் ப.கார்த்திவேல்மாறன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம், துரை வெங்கட், ப்ரியா விஜயரங்கள், செல்வராஜ் மற்றும் 91 சட்டமன்றத் தொகுதிகளை சேர்ந்த அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உடன் இருந்தனர்.

# பள்ளிக் கல்வி நிகழ்ச்சிகளுக்கு வழிகாட்டி நெறிமுறைகள் வெளியீடு



**சென்னை, டிச.07**

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் கல்வி சார்ந்த இணைநிகழ்ச்சிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக பள்ளிக் கல்வி இயக்குநரகம் வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

அதன் விவரம் வருமாறு: பள்ளி மாணவர்கள் அறிவியல் கருத்துக்கள் வாழ்க்கை நெறிகளை பெற்றிட பள்ளிகளில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளை வரைமுறைப்படுத்தும் நோக்கில், நிலையான ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநில பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளிகள், மாதிரி பள்ளிகள், தமிழ அரசு அங்கீகாரம் பெற்ற மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் இணைவு பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து பள்ளிகளுக்கும் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் பொருந்தும்.

கல்விப் பணிகளில் செயலாற்றிவரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் பட்டியல் மாநில அளவில் பள்ளிக்கல்வி இயக்குநராலும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியா்கள் வழிகாட்டுதல்கள் அடிப்படையில் பராமரிக்கப்படும். இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ள அரசு சாரா நிறுவனங்கள் பள்ளிகளில் நிகழ்ச்சிகளில் நடத்துதல், நுழைவுத் தேர்வு சிறப்புப் பயிற்சிகள் உள்ளிட்ட செயல்பாடுகளை மேற்கொள்ளும் முன்பு பள்ளி நிர்வாகம், மாவட்ட கல்வித் துறை நிர்வாகத்திற்கு உரிய தகவல் தெரிவித்தால் போதும் உரிய அனுமதி பெறத் தேவையில்லை. பட்டியலில் இடம் பெறாத தொண்டு நிறுவனங்கள் பள்ளி செயல்பாடுகளில் பங்கேற்கும் போது, தங்களது நிகழ்ச்சிகளின் செயல் திட்டத்தை பள்ளிகள் அமைந்துள்ள மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் முழு விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், சமூக நல அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்கள் உள்ளிட்ட 8 உறுப்பினர்கள் குழுவில் இடம் பெற்றிருப்பர். மாநில அளவிலான குழுவில் பள்ளிக் கல்வித்துறை செயலர், பல்வேறு பள்ளிக்கல்வி இயக்குநர்கள் உள்ளிட்ட 7 உறுப்பினர்கள் குழுவில் இடம் பெற்றிருப்பர்.

பள்ளிகள் அன்றாட கற்பித்தல் நிகழ்வுகளுக்கு இடையூறின்றி பாடத்திட்டத்தோடு தொடர்புடைய செயல்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்படும். அதுவும் பள்ளிகளில் தலைமையாசிரியர் அல்லது அவரால் அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் முன்னிலையில் இந்த செயல்பாடுகள் நடைபெறும் போது அவர்கள் அதிருப்தியடைந்தால் தற்காலிகமாக நிகழ்ச்சியை நிறுத்தவும் அதிகாரம் உண்டு.

பல்வேறு பள்ளி விழாக்கள், கலை, பண்பாடு, பாரம்பரியம், மரபு சார் விழாக்கள், பண்டிகைகள் ஆகியவை பள்ளிகளில் கொண்டாடும் போது மாணவர்கள் பாதுக்காப்பை கருத்தில் கொண்டு நேரம், அவசர கால வழி போன்றவைகளை நிர்ணயிக்க வேண்டும். ஊறுவிளைவிக்கும் ஒளி விளக்குகள், மாசு ஏற்படும் ஒலி பெருக்கிகள் போன்றவைகளில் கவனம் தேவை. விழா ஒருங்கிணைப்பு குழுவில் அனைத்து மதங்களைச் சார்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இடம் பெறவேண்டும்.

பள்ளி நிகழ்வில் ஒளி, ஒலிப் பாடல்கள், சொற்பொழிவுகள் ஆகியவை கண்ணியமிக்கவையாகவும் இருத்தல் வேண்டும். விழா ஒருங்கிணைப்புக் குழு ஒத்திகை பார்த்து அனைவருக்கும் ஏற்ற வகையிலும் அமைந்துள்ளதை உறுதி செய்திடல் வேண்டும். சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்கக் கூடியவர்களின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான முதன்மைப் பட்டியலில் பராமரிக்கப்படுகிறது. இந்த பட்டியல்களில் இடம் பெறாதவர்கள் பங்கேற்கும் போது அவர்கள் குறித்த தனிப்பட்ட முழு விவரங்களையும் அளித்து உரிய முன் அனுமதி பெற வேண்டும். அனைத்து முன் அனுமதிகளும் 15 வேலை நாள்களுக்கு முன்பு பெறவேண்டும். விண்ணப்பங்களை பரிசீலிக்கும் குழுவிற்கும் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

பாபர் மசூதி இடிப்பு தினம்:

# தமிழகம் முழுவதும் 1 லட்சம் போலீசார் பாதுகாப்பு



**சென்னை,டிச.07**

பாபர் மசூதி இடிப்பு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதையொட்டி தமிழகம் முழுவதும் 1 லட்சம் போலீசார் பாதுகாப்புபணியில் ஈடுபட்டனர்.

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் கட்டப்பட்டிருந்த பாபர் மசூதி கடந்த 1992–ம் ஆண்டு டிசம்பர் 6– ஆம் தேதி அன்று தகர்க்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 6–ஆம் தேதி அன்று பாபர் மசூதி இடிப்பு தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

பாபர் மசூதி இடிப்பு தினத்தையொட்டி அசம்பாவித சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்காக பேருந்து, ரெயில் நிலையங்கள், வழிப்பாட்டு தலங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் போலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்படுவது வழக்கம். சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற கார் குண்டுவெடிப்பு சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியதால் இந்த ஆண்டு பாபர் மசூதி இடிப்பு தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் தமிழ்நாட்டிலும் விமான நிலையம்,

பேருந்து நிலையம், ரெயில் நிலையங்கள், வழிபாட்டு தலங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கூடுதல் கண்காணிப்பு நடவடிக்கையில் போலீசார் ஈடுபட்டுள்ளனர். சென்னையில் 15 ஆயிரம் போலீசார் உள்பட தமிழகம் முழுவதும் 1 லட்சம் போலீசார் இன்று பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

எழும்பூர், சென்டிரல், தாம்பரம் போன்ற முக்கிய ரெயில் நிலையத்தில் பயணிகள் உடமைகள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதேபோன்று சென்னை முழுவதும் நேற்றிரவு முதல் வாகன சோதனையில் போலீசார் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

தனியார் தங்கும் விடுதிகளிலும் போலீசார் சோதனை நடத்தி, சந்தேகத்துக்குரிய நபர்கள் தங்கி இருக்கிறார்களா? என்பதை ஆய்வு செய்தனர்.

மேலும், கோயம்பேடு மார்க்கெட், பேருந்து நிலையம், பாரிமுனை, தியாகராய நகர், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், பெரியமேடு, உள்ளிட்ட குறிப்பிட்ட பகுதிகளில் போன்ற பகுதிகள் தீவிர கண்காணிப்பு பணியில் போலீஸ் ஈடுபட்டனர். திருச்சி, வேலூர், கோவை என முக்கிய நகரங்களிலும் கண்காணிப்புகள் விரிவடைந்துள்ளன. விழுப்புரத்திலும் மோப்ப நாய் உதவியுடன், விழுப்புரம் ரெயில் நிலையம், புதிய பஸ் நிலையம் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், வாகன நிறுத்துமிடங்கள், வழிபாட்டுத் தலங்களில், மெட்டல் டிடெக்டர் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

வெளிமாநிலங்களில் இருந்து தமிழகம் வரும் அனைத்து வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

# தரமான வேட்டி சேலை வழங்குவதில் அரசு உறுதி

## எடப்பாடிக்கு அமைச்சர் காந்தி பதில்






**சென்னை, டிச. 07**

விலையில்லா வேட்டி சேலைத் திட்டம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி எழுப்பிய கேள்விகளுக்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பதில் அளித்துள்ளார். வெளிமாநிலங்களில் இருந்து 50 சதவீத வேஷ்டி சேலைகள் வாங்கப்படுவதாகவும், பொங்கல் பண்டிகைக்கு வழங்க வேண்டிய 17 லட்சம் வேஷ்டிகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள அமைச்சர் ஆர்.காந்தி, ‘பொங்கல் பண்டிகையின்போது, வேஷ்டி சேலைகள் வழங்கும் நோக்கத்துடனும், மாநிலத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த கைத்தறி, பெடல் தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடா்ந்து வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. இதனால், சுமார் 2,800 கைத்தறி நெசவாளா்கள், 11,300 பெடல் தறி நெசவாளர்கள், 66,000 விசைத்தறி நெசவாளா்களுக்கு தொடர் வேலை வாய்ப்பைப் பெறுகின்றனா். இந்த நிலையில், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட வேஷ்டி மாதிரிகளை தர பரிசோதனை செய்தபோது பாலிகாட் பாவு நூலில் நிர்ணயிக்கப்பட்ட அளவீடுகளைவிட, பாலியஸ்டர் சதவீதம் அதிகமாக உள்ளது என்பது கண்டறியப்பட்டது. இதனால் சுமார் 13 லட்சம் வேஷ்டிகள் நிராகரிக்கப்பட்டன. அதற்குப் பதிலாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து சுமார் 9 லட்சம் வேஷ்டிகள் திரும்பப் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 லட்சம் வேஷ்டிகளும் திரும்பப் பெறப்பட்டு வருகிறது. தரமான வேஷ்டி சேலைகள் மட்டுமே பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பதில் அரசு மிகவும் உறுதியாக உள்ளது. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தமிழக அரசு மீது உண்மைக்குப் புறம்பான, அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டை எடப்பாடி பழனிசாமி சுமத்தி வருகிறார்’ என்று தெரிவித்துள்ளார்.



குன்னூரில் பெய்த தொடர் மழையால் ஏலக்காய் செழித்து வளர்ந்துள்ளது.

சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை:

# கட்டிட தொழிலாளிக்கு 20 ஆண்டுகள் சிறை

## சிவகங்கை கோர்ட்டு தீர்ப்பு




**சிவகங்கை, டிச.07**

சிவகங்கை மாவட்டம் எஸ்.எஸ்.கோட்டை அருகே உள்ள முத்துப்பட்டியைச் சேர்ந்தவர் அலெக்ஸ் (28). இவர் கட்டிட தொழிலாளியாக வேலை பார்த்து வருகிறார் இவருக்கும் இப்பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமிக்கும் பழக்கம் ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில் கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் அலெக்ஸ் அச்சிறுமியை கடத்திச் சென்று திருமணம் செய்து உள்ளார் பின்னர் அச்சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார் அதற்கு அலெக்சின் பெற்றோர் உடந்தையாக இருந்ததாக கூறப்படுகிறது

இச்சம்பவம் குறித்து திருப்பத்தூர் அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவுசெய்து அலெக்ஸ் அவரது தந்தை ஆண்டி (57) தாயார் லட்சுமி (50) மற்றும் அவரது உறவினர்களான முருகன், கோவிந்தராஜன் ஆகிய ஐந்து (5) பேரை கைது செய்தனர்

இது தொடர்பான வழக்கு சிவகங்கை போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது இவ்வழக்கு விசாரணையின் போது அலெக்சின் உறவினர்களான முருகன் மற்றும் கோவிந்தராஜன் உயிரிழந்தனர்

இவ்வழக்கு குறித்து நடைபெற்று வந்த விசாரணையில் அலெக்சிற்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனையும் 4 ஆயிரம் ரூபாய் அபராதமும் அவரது தந்தை ஆண்டி, தாயார் லட்சுமி ஆகியோருக்கு தலா ஓராண்டு சிறை தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து நீதிபதி கோகுல் முருகன் தீர்ப்பளித்தார் மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஐந்து (5 ) லட்சம் ரூபாய் வழங்க அரசிற்கு உத்தரவிட்டார்



கேரள மாநிலம் மூணாறு அருகே உள்ள ஒரு ஏரியில் தண்ணீர் நிரம்பி படகு சவாரி விடப்பட்டுள்ளது.

### 2ம் கட்ட அமலாக்கத்தின்கீழ்

# பணிநேர வரம்பு விதிகளை தளர்த்துவது ஆபத்து

## இந்திய விமானிகள் சங்கம் கண்டனம்

புதுடெல்லி, டிச. 07–

விமானிகள் பணிநேர வரம்பு விதிகளின் 2ம் கட்ட அமலாக்கத்தின்கீழ், இண்டிகோ விமான நிறுவனத்துக்கு மட்டும் சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) சலுகை அளித்துள்ளது. இதற்கு 'ஏர்லைன்ஸ் பைலட்ஸ் அசோசியேஷன் ஆப் இந்தியா' கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இண்டிகோ விமானங்களின் சேவை ரத்து மற்றும் தாமதத்தால் பயணிகள் கடும் பாதிப்பை சந்தித்துள்ளனர்.

இந் நிலையில் விமானிகள் பணிநேர வரம்பு விதிகளை இண்டிகோ விமான நிறுவனத்துக்கு மட்டும் சிவில் விமான போக்கு வரத்து இயக்குநரகம் சலுகை அளித்துள்ளது.

இதற்கு கண்டனம் தெரிவித்து இயக்குநரகத்துக்கு விமானிகள் சங்கம் எழுதியுள்ள கடிதம்:

எந்த விமான நிறுவனத்துக்கும் வணிக நலன்களின் அடிப்படையில் விலக்குகள், சலுகைகள் வழங்கப்படாது என்று கடந்த நவ.24ம் தேதி நடந்த கூட்டத்தில் சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் உறுதியளித்தது.

அதற்கு மாறாக தற்போது இண்டிகோவுக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது. விமானிகள் பணி நேர வரம்பு விதிகள் மனித உயிர்களை பாதுகாப்பதற்காகவே உள்ளன.

இந்த வரம்புகளை தளர்த்துவது விமானிகள், பயணிகள் மற்றும் விமானங்களுக்கு ஏற்றுக் கொள்ள முடியாத ஆபத்தை ஏற்படுத்தும்.

இண்டிகோவுக்கு வழங்கப்பட்ட சலுகை மூலம், இரவு பணிக்கான வரையறை தளர்த்தப்பட்டுள்ளது. மேலும், இரவு நேரத்தில் தரையிறங்க அனுமதிக்கப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை 2ல் இருந்து 4 ஆக இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. இது விதிகளுக்கு முற்றிலும் எதிரானது. வணிக நலனுக்காக பயணிகளின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்ககூடாது. இந்த சலுகைகளை ரத்து செய்யாவிட்டால் ஏற்படும் எந்த விபத்துக்கும், உயிரிழப்புக்கும்இயக்குநரகமே நேரடி பொறுப்பாகும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

### சிறுவயதில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதால்

# 20 ஆண்டுகளாக வீட்டுக்குள் இருந்த சிறுமி பார்வை குறைவுடன் மீட்பு

பஸ்தார், டிச.07–

சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தார் மாவட்டம் பகாவந்த் கிராமத்தைச் சேர்ந்தவர் லிசா. இவர் கடந்த 2000ம் ஆண்டில் தனது 6 வயதில் அங்குள்ள பள்ளியில் 2ம் வகுப்பு படித்துள்ளார். அப்போது அவரது கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் லிசாவை கொன்றுவிடுவேன்எனமிரட்டியுள்ளார். அவரது பேச்சை கேட்டு மிகவும் பயந்துபோன சிறுமி வீட்டைவிட்டு வெளியேறவில்லை. இந் நிலையில் அவரது தாயும் இறந்துவிட்டார். அந்த சிறுமியை பார்த்துக் கொள்ள யாரும் முன்வரவில்லை. இதனால் அவரது தந்தை லிசாவை அவர்களது மண் குடிசை வீட்டுக்குள் பூட்டி விட்டு சென்றுவிடுவார்.

அந்த வீட்டில் ஜன்னல் எதுவும் இல்லாததால் இருட்டாகவே இருந்துள்ளது. அவரது தந்தை வீட்டு வாசலில் உணவை மட்டும் வைத்துவிட்டு சென்றுவிடுவார். இப்படியாக கடந்த 20 ஆண்டுகளுக்கு மேல் வீட்டுக்குள்ளேயே லிசா முடங்கி கிடந்துள்ளார்.

இது அவரது உடல் வளர்ச்சி, மன வளர்ச்சியை பாதித்து கண் பார்வையையும் பாதித்துள்ளது. இது குறித்து தகவல் அறிந்த சமூக நலத்துறை அதிகாரிகள், அந்த சிறுமியை மீட்டு ஜக்தல்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

லிசாவைபெயர்சொல்லி அழைத்தால்கூட அவரால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஏதாவது சத்தத்தை கேட்டாலும், யாராவது தொட்டாலும் அவர் பயப்படுகிறார். அவரது உடல்நிலையை ஆராய்ந்த மருத்துவக் குழுவினர், அவரால் வெளிச்சத்தை பார்க்க முடியாது.

இருளிலேயே அவர் வாழ்ந்ததால் அவரது பார்வை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என்றனர். அவரது மனவளர்ச்சியும் பாதிக்கப்பட்டுள்ளதால், அவர் சிறுமியை போன்றே நடந்து கொள்கிறார்.

இச்சம்பவம் குறித்த விசாரணைக்கு சமூக நலத்துறை உத்தரவிட்டுள்ளது. இதன் விசாரணை அறிக்கை வந்தவுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

லிசாதற்போதுகராண்டா ஆசிரமத்தில் வசிக்கிறார். அவரை அங்குள்ள பணியாளர்கள் நன்கு கவனித்துக் கொள்கின்றனர்.

### கருவில் பாலினம் கண்டறிந்து கூறிய

# முன்னாள் செவிலியர் உள்பட 2 பெண்கள் கைது

## போலீஸ் அதிரடி

ராசிபுரம்,டிச.07–

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த மெட்டாலா கோரையாறு பகுதியில் பணத்தை பெற்று கருவில் உள்ள குழந்தை ஆணா?, பெண்ணா?, என பாலினத்தை கண்டறிந்து கூறுவதாக ராசிபுரம் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் கலைச்செல்விக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

உடனே கலைச் செல்வி, மருத்துவ குழுவினர் மற்றும் நாமகிரிப் பேட்டை போலீசார் அப்பகுதியில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது ஒரு வீட்டில் சட்ட விரோதமாக போர்ட்டபிள் அல்ட்ரா ஸ்கேன் மூலம் கருவில் உள்ள பாலினத்தை 2 பெண்கள் கண்டறிந்து கூறிவந்தது தெரியவந்தது.

அதையடுத்து இந்த சோதனைக்கு பயன்படுத்தப்பட்ட ஸ்கேன் இயந்திரம், மருந்து மாத்திரைகள் உள்ளிட்டவைகளைநாமகிரிப்பேட்டை காவல்துறையினர்பறிமுதல் செய்தனர்.

பின்னர் பிடிபட்ட 2 பெண்களையும் நாமகிரிப்பேட்டை காவல் துறையினர் கைது செய்து விசாரணை நடத்தினர்.

இதில் ஆத்தூர் பகுதியை சேர்ந்த கருணாகரன் என்பவரது மனைவி கலைமணி(46) என்பதும் பி.எஸ்.சி. நர்சிங் முடித்து தொடவூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தலைமை செவிலியராக பணியாற்றிய போது, இதே போல் சட்ட விரோ





தமாக கருவில் உள்ள பாலினத்தை கண்டறியும் சோதனையில் ஈடுபட்டு கடந்த பிப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டு பணியிடம் நீக்கம் செய்யப்பட்டதும் தெரியவந்தது.கலைமணி, அவருக்கு உதவியாக செயல்பட்ட ஆத்தூர் பகுதியை சேர்ந்த முருகன் என்பவரது மனைவி பூமணி(45) ஆகிய இருவரும் கர்ப்பிணி பெண்களின் வீடுகளுக்கே சென்று வயிற்றில் இருப்பது ஆணா?. பெண்ணா?., என ஸ்கேன் செய்தும் அதற்கு ரூ.10,000 முதல் 25,000 வரை பணம் பெற்றதாக வாக்குமூலம் அளித்தனர்.பின்னர் இருவரையும் நாமகிரிப் பேட்டை போலீசார் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்து சேலம் சிறையில் அடைத்தனர்.

# டிச.7க்குள் பயணிகளுக்கு விமான கட்டணத்தை திருப்பி தரவேண்டும்

## இண்டிகோவுக்கு மத்திய அரசு கெடு

புதுடில்லி,டிச.07

டிச.7க்குள்பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு உரிய விமானகட்டணத்தைஇண்டிகோ நிறுவனம் திருப்பி தர வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

விமானப்பணி, ஊழியர்களுக்கானபணிநேரம் உளளிட்ட புதிய விதிகள் காரணமாக, இண்டிகோ விமான நிறுவனத்தின் சேவைகடுமையாகபாதிகக்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம் 1000க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

எந்த மாற்று ஏற்பாடுகளும் விமான நிறுவனம் செய்து தராததால் நாடு முழுவதும் உள்ள பல் வேறு விமான நிலையங்களில் இண்டிகோ விமான பயணிகள் போராட்டத்தில் இறங்கினர். நிலைமை மோசம் அடைந்ததால் பயணிகளிடம்விமானநிறுவனம்மன்னிப்பு கோரியது.

புதிய விதிகளை விமான போக்குவரத்து ஆணையரகம் திரும்ப பெற்று விட்டாலும், இன்றும் 500க்கும் மேற்பட்ட இண்டிகோ விமான சேவைகளின் ரத்து தொடர்கிறது.

இந் நிலையில், டிச.7ம் தேதிஇரவுக்குள்ரத்துசெயயப்பட்ட விமானங்களின் பயணக் கட்டணத்தை பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு இண்டிகோ நிறுவனம் திருப்பி தர வேண்டும் என்றுமத்தியவிமானபோககுவரத்து அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.இதுகுறிதது தமது எக்ஸ் வலைதள பதிவில் கூறி உள்ளதாவது;தற்போதைய கட்டண விலையேற்றங்களில் இருந்து பயணிகளை காக்க, பாதிக்கப்பட்டவழித்தடஙகளில் நியாயமான கட்டணங்களை உறுதி செய்ய அமைச்சகம் ஒழுங்கு முறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பயணிகளை பாதுகாகக, குறிப்பாக அவசர பயணம் மேற்கொள்ள உள்ளவர்களுக்காககடுமையான கட்டண வரம்புகள் அமல் படுத்தப்பட்டுள்ளன.

கட்டணநிர்ணயங்களை உன்னிப்பாகக்கண்காணிதது வருகிறோம்.

மேலும் பயணிகள் நலனுக்காக எந்த விதிமீறல் என்றாலும் உடனடி நடவடிக்கை எடுப்போம்.

பாதிக்கப்பட்டு, நிலுவையில் உள்ள அனைத்து பயணிகளின் பணத்தை தாமதமின்றி வழங்க டிசம்பர் 7, 2025 அன்று இரவு 8 மணிக்குள் முடிக்க இண்டிகோ நிறுவனத்திற்கு சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு மறு அட்டவணை கட்டணங்களை வசூலிகக வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விமான போக்குவரத்து நிறுவனங்களின் எந்தவொரு இணக்கமில்லாத செயல்கள் ஒழுங்கு நடவடிக்கைக்குவழிவகுககும்.சரக்குகளின் உரிய முகவரிகளை கண்டறிந்து 48 மணி நேரத்திற்குள் வீட்டிற்கு டெலிவரி செய்ய வேண்டும். மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளி பயணிகள் மற்றும் அவசர பயணம் தேவைப் படுபவர்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. விமான நிறுவனங்களின் கட்டண நிலைகளை அமைச்சகம் தொடர்ந்து உன்னிப்பாக கண்காணிக்கும். பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளை மீறினால், உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தமது எக்ஸ் வலைதள பதிவில் மத்திய விமான போக்குவரத்து அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே பயணிகளுக்கு பணத்தை திருப்பி தருவதாக இண்டிகோ நிறுவனம் ஒப்பிதல் அளித்துள்ளது.

இதுகுறித்து வெளியிடடு உள்ள எக்ஸ் வலைதள பதிவில்கூறியுள்ளதாவது;

சமீபத்திய சம்பவங்களின் விளைவாக, பயணம் ரத்து செய்ததை அடுத்து, அதற்கான பணம் தானாகவே திருப்பி அளிக்கப்படும். டிசம்பர் 5, 2025 முதல் டிசம்பர் 15, 2025வரையிலானபயணததிற்கான உங்கள் முன்பதிவுகளின் அனைதது ரத்துசெய்தல், மறு அட்டவணைகோரிக்கைகளுககும் நாங்கள் முழுவிலக்கு அளிப்போம். இவ்வாறு இண்டிகோ நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டு உள்ளது.

# பீஹார் அரசியலில் நிதிஷ் வாரிசு

## ஜேடியு செயல் தலைவர் கணிப்பு

பாட்னா,டிச.07

பீஹார்அரசியலில்முதலவர் நிதிஷ்குமாரின் மகன் நிஷாந்த் நுழையலாம் என்றஜேடியு செயல்தலைவர் சஞ்சய்குமார் ஜா கூறி உள்ளார்.

அண்மையில் முடிந்த பீஹார் சட்டசபை தேர்தலில் அமோக வெற்றி பெற்று தேஜ கூட்டணி ஆட்சி அமைத்தது. முதல்வராக நிதிஷ்குமார் பதவியேற்றார். வலுவான பெரும்பான்மையுடன் அவர் ஆட்சி அமைத்த நாள் முதல், நிதிஷ் குமாரின் மகன் நிஷாந்த்அரசியலில் இறஙகுவார் என்று அக்கட்சியினர் எதிர்பார்த்து இருந்தனர்.



இந் நிலையில், நிதிஷ் மகன்நிஷாந்த் அரசியலில் நுழையலாம்என்றுஅக்கட்சியின்முக்கியபிரமுகரும், செயல்தலைவருமானசஞசய்குமார் ஜா கூறி உள்ளார். பாட்னா விமான நிலையத்தில் ஒரு பக்கம் நிஷாந்த் நிருபர்களிடம் பேசிக் கொண்டு இருந்தார். அப்போது, அருகில் நின்றுகொண்டுஇருந்தசஞசய்குமார் ஜா கூறியதாவது;

கட்சியில் உள்ள உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என அனைவரும் நிஷாந்த் குமார் கட்சியில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்றுவிரும்புகிறோம்.எஙகளுக்கு இதுநடக்கவேணடும். ஆனால் எப்போது சேருவார் என்பதை அவர் (நிஷாந்த்குமார்) தான் முடிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு சஞ்சய்குமார் ஜா தெரிவித்தார்.


# ராமநாதபுரம் அருகே 2 கார்கள் மோதல்

## அய்யப்ப பக்தர்கள் உள்பட 5 பேர் பலி

ராமநாதபுரம்,டிச.07–

ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை அருகே சாலையோரம் நின்று கொண்டிருந்த கார் மீது மற்றொரு கார் மோதியது. இந்த விபத்தில் 5 பேர் பலியானார்கள். 7 பேர் படுகாயம் அடைந்தனர். இன்று அதிகாலையில் நடந்த இந்த விபத்து பற்றிய விவரம் வருமாறு:–

ஆந்திர மாநிலத்தை சேர்ந்த அய்யப்ப பக்தர்கள் கன்னியாகுமரி சென்று விட்டு ராமேஸ்வரம் செல்வதற்காக வந்து கொண்டிருந்தனர். இன்று அதிகாலை 3 மணியளவில் அய்யப்ப பக்தர்களின் கார் ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை அருகே உள்ள கும்பிடுமதுரை பகுதியில் உள்ள தனியார் ஓட்டல் அருகே சாலை ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. அப்போது ஏர்வாடியில் இருந்து கீழக்கரை நோக்கி வந்த கீழக்கரை நகர் மன்ற தலைவருக்கு சொந்தமான கார், நிறுத்தப்பட்டிருந்த அய்யப்ப பக்தர்களின் காரின் பின்புறத்தில் பலமாக மோதியது. இதில் காரை ஓட்டி வந்த கீழக்கரை நகர் திமுக ஓட்டுநர் அணி அமைப்பாளர் முஸ்டாக் அகமது(30), ஆந்திராவை சேர்ந்த அய்யப்ப பக்தர்கள் ராமச்சந்திர ராவ் (55), அப்பாரோ நாயுடு (40) பண்டார சந்திரராவ் (42) ஆகியோர்சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.



சம்பவம்குறித்துஅறிந்த கீழக்கரை போலீசார் விபத்தில் உயிரிழந்த 4 பேர் உடல் மற்றும் காயமடைந்தவர்களை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அப்போது அங்கு மேலும் ஒரு அய்யப்ப பக்தரான ஆந்திராவை சேர்ந்த ராமர் (45) சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். காரில் பயணம் செய்த கீழக்கரையை சேர்ந்த 6 பேர் மற்றும் ஆந்திராவை சேர்ந்த ஒருவர் ஆகிய 7 பேர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். கீழக்கரை நகர் திமுக ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் அஸ்ரப் அலி (28) பலத்த காயங்களுடன்மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். விபத்து குறித்து கீழக்கரை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### நாம் தமிழர் கட்சியின்

# 100 வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு

## சீமான் அறிவிப்பு

சென்னை, டிச.07

வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு நாம் தமிழர் கட்சி சார்பில் முதல்கட்டமாக 100 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலை அந்தக் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டார்.234 வேட்பாளர்களை வரும் பிப்.21–ஆம் தேதி திருச்சியில் நடைபெறவுள்ள நாம் தமிழர் கட்சி மாநாட்டில் ஒரே மேடையில் அறிமுகம் செய்யவுள்ளதாக சீமான் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் முதல் கட்டமாக 100 பேர் கொண்ட வேட்பாளர்கள் பட்டியலை சீமான் வெளியிட்டார். இதில், நாதக இளைஞரணி மாநில ஒருங்கிணைப்பாளர் இடும்பாவனம் கார்த்திக் (வேதாரண்யம்), திரைப்பட இயக்குநர் மு.களஞ்சியம் (ஆயிரம் விளக்கு), தமிழ்நாடு ஜல்லிக்கட்டு மீட்புக் குழுத் தலைவர் டி.ராஜேஷ் (திருவெறும்பூர்), வீரப்பன் மகள் வித்யாராணி (மேட்டூர்), நா.த.க. செய்தித் தொடர்பாளர் கு.செந்தில்குமார் (திருவள்ளூர்) உள்பட 100 வேட்பாளர்களின் பெயர்கள் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

# 'இந்தியா தான் எங்கள் முக்கிய கூட்டாளி நாடு'

## அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன்,டிச.07

அமெரிக்கா வெளியிட்டுள்ள புதிய தேசிய பாதுகாப்பு கொள்கையில், இந்தியாவை 'முக்கியகூட்டாளி' நாடாக அறிவித்துள்ளது. மேலும், வர்த்தகம், பாதுகாப்பு, தொழில் நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில், இந்தியாவுடன் இணைந்து செயல்படுவோம் எனவும் அறிவித்துள்ளது.

2025 - 26 ஆண்டுக்கான புதிய தேசிய பாதுகாப்பு கொள்கையை, அதிபர் டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. இதில், இந்தியாவை முக்கிய கூட்டாளி நாடாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து வெள்ளை மாளிகை அதிகாரிகள் கூறியதாவது: உலக பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு நிலைத்தன்மை, தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றில் இந்தியா முக்கிய சக்தியாக உள்ளது. அதனால், இந்தியாவுடன் நீண்டகால நட்புறவை வலுப்படுத்துவது, அமெரிக்காவின் பாதுகாப்பு குறிக்கோளில் முக்கிய அங்கமாக உள்ளது.

இந்தியாவின் வளர்ச்சியையும், தொழில்நுட்ப திறன்களையும், மிகச்சிறந்த சக்தியாக அமெரிக்கா மதிப்பிடுகிறது. இந்தோ - பசுபிக் பகுதியில் சீனாவின் விரிவாக்கம் அதிகரித்து வரும் நிலையில், இந்தியா - அமெரிக்கா இணைந்து செயல்படுவது, அந்த பகுதியின் பாதுகாப்பு அமைப்பில் முக்கியத் தூணாக இருக்கும்.

பாதுகாப்பு, வர்த்தக ஒத்துழைப்பு:ராணுவப் பயிற்சிகள், கடல் பாதுகாப்பு கண்காணிப்பு, புதிய தொழில்நுட்ப ஆய்வகம் மற்றும் பாதுகாப்பு முதலீடுகள் உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்பட உள்ளன. மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், தொழில்நுட்ப பரிமாற்றம், பாதுகாப்புக் கருவிகள் மேம்பாடும் அதிகரிக்க உள்ளன.

ஆயுதத் தொழில்நுட்பம், செயற்கைக்கோள் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்புஆகியதுறைகளில் இந்தியா - அமெரிக்கா கூட்டணி பலமாக மாற உள்ளது. எதிர்கால பாதுகாப்பு சவால்களை சமாளிக்க, இணைந்த செயல் திட்டம் உருவாக்கப்படும். இவ்வாறு அவர்கள் தெரித்தனர்.ரஷ்ய அதிபர் புடின் அரசு முறை பயணமாக இந்தியா வந்து சென்றுள்ள நிலையில் இவ்வாறு அமெரிக்கா அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் மீட்பு பணி முடித்து நாடு திரும்பிய நம் வீரர்கள்



கொழும்பு,டிச.07

இலங்கை சென்ற என்.டி.ஆர்.எப்., எனப்படும் தேசிய பேரிடர் மீட்புப்படை, மழை வெள்ள மீட்புப் பணிகளை முடித்து நாடு திரும்பியது.

நம் அண்டை நாடான இலங்கை, 'டிட்வா' புயலால் கடும் பாதிப்பை சந்தித்துள்ளது. புயலால் அங்கு 486 பேர் உயிரிழந்துள்ளனர்; 341 பேர் காணாமல் போயுள்ளனர்.

'ஆப்பரேஷன் சாகர் பந்து' என்ற திட்டத்தின் கீழ், அந்நாட்டுக்கு நம் நாடு உதவிக்கரம் நீட்டி வருகிறது.

அதன்படி உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள், நடமாடும் மருத்துவமனை, தற்காலிக பாலம் போன்றவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், நம் தேசிய பேரிடர் மீட்புப்படையினரும் மோப்ப நாய்களுடன் களத்தில் இறங்கி பணியாற்றினர். கடந்த மாதம் 29 முதல், 80 வீரர்கள் இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றினர்.

கொச்சிகாடே, புத்தளம், கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், நம் வீரர்கள் மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிக்கியிருந்தவர்களை அவர்கள் மீட்டனர்.

இந்நிலையில், இலங்கையில் தேடுதல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்து,

நம் தேசிய பேரிடர் மீட்புப்படையினர் நேற்று நாடு திரும்பினர்.

# பிரிட்டனை விட்டு செல்லும் வெளிநாட்டினர்

## முதலிடத்தில் இந்தியர்கள்; 2ம் இடத்தில் சீனர்கள்

லண்டன்,டிச.07

ஐரோப்பிய நாடான பிரிட்டனில் தங்கியிருந்த வெளிநாட்டினர், வரலாறு காணாத வகையில் வெளியேறி வருகின்றனர். அதில், இந்தியர்களே முதலிடத்தில் உள்ளனர்.

வேலைக்காகவும், படிப்புக்காகவும் வெளிநாட்டினர் அதிகம் செல்லும் நாடுகளில் பிரிட்டன் முன்னணியில் உள்ளது. அதுவே அந்நாட்டிற்கு பிரச்னையாகவும் மாறியது.

39 சதவீதம் வெளிநாட்டினர் எண்ணிக்கை அதிகரித்ததால், உள்ளூர் மக்கள் சிரமப்படுவதாக பிரிட்டன் அரசு கூறியது.

இதனால், முன்னாள் பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேட்டிவ் அரசு கடுமையான விசா விதிகளை அறிமுகப்படுத்தியது. இதனால், பிரிட்டனின் நிகரக் குடியேற்றம் வெகுவாகக் குறைந்தது.



பிரிட்டனுக்கு வரும் வெளிநாட்டினரின் எண்ணிக்கை மற்றும் அங்கிருந்து கிளம்பும் வெளிநாட்டினரின் எண்ணிக்கைக்கு இடையே இருக்கும் வித்தியாசமே நிகர குடியேற்றம் எனப்படுகிறது. இது தான் இப்போது சரிந்து வருகிறது.

அந்நாட்டு தேசிய புள்ளி விபர அலுவலகத்தின் தகவலின்படி, 2023ல், 9.44 லட்சமாக இருந்த நிகர குடியேற்றம், 2025ல், 2.04 லட்சம் -ஆக குறைந்துள்ளது. இரு ஆண்டுகளில் ஏழு லட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

மேலும், 2025 ஜூன் வரையிலான காலத்தில், பிரிட்டனை விட்டு வெளியேறியவர்களில் இந்தியர்களே முதலிடத்தில் உள்ளனர்.

மாணவர் விசாக்களில் இருந்த 45,000 பேர், பணி விசாக்களில் இருந்த 22,000 பேர் உட்பட, 75,000 பேர் வெளியேறியுள்ளனர்.

அடுத்தபடியாக, 42,000 சீனர்கள் வெளியேறியுள்ளனர். இதே போல், விசா வழங்குவதும் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பர் வரை 32 லட்சம் விசாக்கள் வழங்கப்பட்ட நிலையில், நடப்பாண்டில் 31 லட்சமாக குறைந்துள்ளது. குறிப்பாக, பணி விசாக்கள் 39 சதவீதம் வரை சரிந்துள்ளது.

எச்சரிக்கை

இதற்கு மத்தியிலும், 2025 ஜூன் வரையிலான காலத்தில், வேலை, படிப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக 1.5 லட்சம் பேர் பிரிட்டன் சென்றுள்ளனர். குடியேற்றத்தில் ஐரோப்பா அல்லாத நாடுகள் பட்டியலில் இந்தியாவே முதலிடத்தில் உள்ளது.

வெளிநாட்டினரின் இருப்பு குறைந்தது பிரதமர் கெயர் ஸ்டாமர் அரசுக்கு பெரும் நிம்மதியாக அமைந்துள்ளது.

ஆனால், திறன்வாய்ந்த உழைப்பாளர்கள் வெளியேறுவது, பிரிட்டனின் நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு தீங்கு விளைவிக்கும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

# முப்படை தளபதியானார் பாக்., அசிம் முனீர்



இஸ்லாமாபாத்,டிச.07

பாகிஸ்தான் முப் படைகளின் தலைமை தளபதியாக, அந்நாட்டின் ராணுவ தளபதி அசிம் முனீர் நியமிக்கப்பட்டு உள்ளார்.

சக்தி வாய்ந்த பொறுப்பில் ஐந்து ஆண்டு களுக்கு நியமிக்கப் பட்டுள்ள அவரிடம், அணு ஆயுதம் முதல் நீதித்துறை வரை, முக்கிய முடிவுகள் எடுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நம் அண்டை நாடான பாகிஸ்தானில் பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் உள்ளார். அந்நாட்டின் ராணுவ தளபதியாக உள்ள அசிம் முனீரின் பதவிக்காலத்தை நீட்டிக்கும் வகையில், அரசியல் சாசனத்தில் திருத்தம் மேற் கொள்ளப் பட்டது.

இதன்படி, 'முப் படைகளின் தலைமை தளபதி' என்ற புதிய பதவி உருவாக்கப்பட்டது.

இந்நிலையில் பாக்., முப்படைகளின் முதல் தலைமை தளபதியாக, அசிம் முனீர் அதிகாரப்பூர்வமாக நியமிக்கப் பட்டுள்ளார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இப்பதவியில் நீடிக்க உள்ள அவர், ராணுவம், கடற்படை, விமானப்படை என மூன்றையும் கட்டுப்படுத்தலாம். இது தவிர, ராணுவ தளபதியாகவும் அசிம் முனீர் நீடிப்பார்.

பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணை அமைப்புகளை நிர்வகிக்கும் பொறுப்பும் இப்பதவியின் மூலம் அசிம் முனீருக்கு சென்றுள்ளது. இதனால், அந்நாட்டின் சக்திவாய்ந்த நபராக அவர் மாறியுள்ளார். இது, அதிபருக்கு இணையான சட்டப் பாதுகாப்பையும் வழங்கியுள்ளது.

# 'எக்ஸ்' நிறுவனத்துக்கு ரூ.1,259 கோடி அபராதம்



லண்டன்,டிச.07

பிரபல தொழிலதிபர் எலான் மஸ்கிற்கு சொந்தமான, 'எக்ஸ்' சமூக ஊடக நிறுவனத்துக்கு ஐரோப்பிய ஒன்றிய ஒழுங்குமுறை ஆணையம், 1,259 கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவரும், 'டெஸ்லா' நிறுவனருமான எலான் மஸ்க், 'டுவிட்டர்' சமூக ஊடக நிறுவனத்தை 2022ல் வாங்கி, பின், 'எக்ஸ்' என பெயர் மாற்றினார். இந்த ஊடகத்தில், பயனர் பாதுகாப்பு குறைபாடுகள் இருப்பதாக பிரேசில், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் தெரிவித்து வருகின்றன. இந்நிலையில், டி.எஸ்.ஏ., எனப்படும் டிஜிட்டல் சேவைகள் சட்ட விதிகளை மீறியதாக, 'எக்ஸ்' நிறுவனத்துக்கு ஐரோப்பிய ஒழுங்குமுறை ஆணையம், 1,259 கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

பணம் செலுத்தினால் கிடைக்கும், 'நீல நிற டிக்' கிடைக்கும் என பயனர்களை ஏமாற்றியதாக, ஒழுங்குமுறை ஆணையம் குற்றம் சாட்டியுள்ளது.

மேலும், விளம்பர தரவுகளில் போதிய வெளிப்படைத்தன்மை இல்லை என்றும், பொது தகவல்களை ஆராய்ச்சியாளர்கள் அணுக அனுமதிக்கவில்லை என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தான் அரசு பள்ளியில் ஹிந்து மாணவியர் மத மாற்றம்



இஸ்லாமாபாத்,டிச.07

பாகிஸ்தானில், அரசு பள்ளியில் படிக்கும் ஹிந்து மாணவியர், வலுக்கட்டாயமாக முஸ்லிம் மதத்துக்கு மத மாற்றம் செய்யப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

நம் அண்டை நாடான பாகிஸ்தானில், ஹிந்துக்கள் சிறுபான்மையினராக உள்ளனர்.

நிர்பந்தம் இல்லை அங்குள்ள சிந்து மாகாணத்தில் மட்டுமே ஹிந்துக்கள் அதிகளவில் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில், சிந்து மாகாணத்தின் மிர்பூர் சக்ராவில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில், ஹிந்து மாணவியரை கட்டாய மத மாற்றம் செய்வதாக புகார் எழுந்துள்ளது.

படிப்பை தொடர விரும்பினால், முஸ்லிமாக மாற வேண்டும் என, ஹிந்து மாணவியரை பள்ளியின் தலைமையாசிரியை வற்புறுத்தியதாகவும், ஹிந்து மதம் குறித்து இழிவாக பேசியதாகவும், முஸ்லிம் மதத்துக்கு மாறாத மாணவியரை வீட்டுக்கு அனுப்பி விட்டதாகவும் பாதிக்கப்பட்ட மாணவியரின் பெற்றோர் தெரிவித்துள்ளனர். இந்த விவகாரம் பாகிஸ்தானில் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து விசாரிக்க சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்பட்டு உள்ளது.

சிந்து மாகாண கல்வி அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் கூறுகையில், 'சம்பந்தப்பட்ட பள்ளியில் சிறப்பு விசாரணைக் குழுவினர் விசாரணை நடத்தினர்.

மேலும், மாணவியர், அவர்களது பெற்றோர், பள்ளி தலைமையாசிரியை மற்றும் பிற ஆசிரியர்களிடம் விசாரணை நடத்தி வாக்குமூலம் பெற்றனர். யாரையும் மத மாற்றத்திற்கு நிர்ப்பந்திக்கவில்லை' என்றார்.

குற்றச்சாட்டு பாகிஸ்தானில் ஹிந்து சிறுமியர் அடிக்கடி கடத்தப்பட்டு, கட்டாய மத மாற்றம் செய்யப்படுகின்றனர்.

அவர்கள் வயதான முஸ்லிம் ஆண்களுக்கு திருமணம் செய்து வைக்கப்படுவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன.

ஆண்டுதோறும் 1,000-க்கும் மேற்பட்ட சிறுமியர் இவ்வாறு கட்டாய மத மாற்றத்திற்கு ஆளாவதாக அந்த அமைப்பு கூறியுள்ளது.

# ஸ்மார்ட் போன், வாட்ச்' பயன்படுத்த சிங்கப்பூர் பள்ளிகளில் கட்டுப்பாடு



சிங்கப்பூர்,டிச.07

சிங்கப்பூரில், பள்ளி நேரங்களில், 'ஸ்மார்ட் போன், ஸ்மார்ட் வாட்ச்' பயன்படுத்த மாணவர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டு உள்ளது.

சமூக வலைதளங்களில் மூழ்கிக் கிடப்பதால், சிறாருக்கு உடல்நலம் மற்றும் மனநலம் பாதிக்கப்படுவதாக பல்வேறு நாடுகளும் கவலை தெரிவித்து உள்ளன.

லாக்கர்அவர்களை பாதுகாக்க, முதல் நாடாக ஆஸ்திரேலியா, 16 வயதுக்குட்பட்டவர்கள் சமூக ஊடகங்கள் பயன்படுத்த தடை விதித்துள்ளது. இதைத் தொடர்ந்து, டென்மார்க், நார்வே, மலேஷியாவிலும் தடை விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தென் கிழக்கு ஆசிய நாடான சிங்கப்பூரின் கல்வி அமைச்சகம், நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

வரும் 2026 ஜன., 1 முதல், மேல்நிலைப் பள்ளிகளில், பள்ளி நேரங்களில், ஸ்மார்ட் போன், ஸ்மார்ட் வாட்ச் பயன்படுத்த தடை விதிக்கப்படுகிறது.

இதன்படி, இடைவேளைகளில் அவற்றை பயன்படுத்தக் கூடாது. பள்ளிக்கு வந்ததும், மாணவர்கள் தங்களது ஸ்மார்ட் போன், ஸ்மார்ட் வாட்சுகளை லாக்கர்களில் வைக்க வேண்டும்.

வரவேற்பு தேவைப்படும் சமயங்களில் அவற்றை பயன்படுத்த பள்ளி நிர்வாகம் அனுமதிக்கும். மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டை அதிகரிக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில், துவக்கப் பள்ளிகளில் இந்த தடை ஏற்கனவே உள்ள நிலையில், தற்போது மேல்நிலைப் பள்ளிகளிலும் நீட்டிக்கப்பட்டதற்கு பெற்றோர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

### புயலால் 486 பேர் பலி 341 பேர் மாயம்

# இலங்கைக்கு நடமாடும் இரும்பு பாலம்

## கட்டுமான பணியில் இந்திய ராணுவம் தீவிரம்



கொழும்பு,டிச.07

'டிட்வா' புயலால் சின்னாபின்னமாகியுள்ள இலங்கைக்கு இந்தியா நடமாடும் இரும்புப் பாலங்கள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்துத் தொடர்ந்து உதவிக்கரம் நீட்டி வருகிறது. இலங்கையில் கடந்த நவம்பர் 16ம் தேதி முதல் தாக்கி வரும் 'டிட்வா' புயல் மற்றும் அதனால் ஏற்பட்ட கனமழை காரணமாக இதுவரை 486 பேர் உயிரிழந்துள்ளனர். வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கிய 341 பேரைக் காணவில்லை என்றும், சுமார் 18 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மீட்புப் பணியில் ஈடுபட்ட 8 பேர் விபத்தில் சிக்கி உயிரிழந்தனர்.

சுமார் 1.88 லட்சம் மக்கள் 1,347 அரசு நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் துண்டிக்கப்பட்டு உள்கட்டமைப்புகள் சிதைந்ததால், இலங்கைக்குச் சுமார் 700 கோடி டாலர் வரை பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அண்டை தேசத்தின் துயர் துடைக்க 'ஆபரேஷன் சாகர் பந்து' என்ற பெயரில் இந்தியா மீட்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. வெள்ளத்தால் சாலைகள் துண்டிக்கப்பட்ட இடங்களை இணைப்பதற்காக, உடனடியாகப் பொருத்தக்கூடிய வகையிலான நவீன இரும்புப் பாலங்களை இந்தியா நேற்று அனுப்பி வைத்தது.

இந்திய ராணுவத்தின் சத்ருஜீத் படைப்பிரிவு மற்றும் பேரிடர் மீட்புக்குழுவினர் களத்தில் இறங்கிச் சேவையாற்றி வருகின்றனர். முன்னதாக விமானப்படை விமானம் மூலம் நடமாடும் மருத்துவமனை மற்றும் 70 பேர் கொண்ட மருத்துவக் குழுவினர் அங்கு விரைந்தனர். மேலும், ஐஎன்எஸ் விக்ராந்த் மற்றும் உதய்ஜிரி கப்பல்கள் மூலம் 90 டன் எடையுள்ள உணவுப் பொருட்கள், கூடாரங்கள் மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

மிகமோசமானப் பேரழிவைச் சந்தித்துள்ள வேளையில் இந்தியா அளித்து வரும் ஆதரவிற்கு இலங்கை அதிபர் அனுர குமார திசநாயக்க நன்றி தெரிவித்துள்ளார்.

## சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.320 உயர்ந்து ரூ.96,320 க்கு விற்பனை



சென்னை: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.40 உயர்ந்து , ஒரு கிராம் ரூ.12,040 க்கு விற்பனையாகிறது. ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.320 உயர்ந்து ஒரு சவரன் ரூ.96,320 க்கு விற்பனையாகிறது. சென்னையில் வெள்ளி விலை ஒரு கிராம் ரூ.3. உயர்ந்து ரூ.199 க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## பெட்ரோல் விலை ரூ.100.80, டீசல் விலை ரூ.92.39க்கு விற்பனை




சென்னை: பெட்ரோல் மற்றும் டீசல் விலை தினமும் மாற்றி அமைக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் இன்றைய பெட்ரோல் விலை சென்னையில் லிட்டருக்கு ரூ.100.80 ஆகவும், டீசல் விலை லிட் டருக்கு ரூ.92.39 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இயற்கை எரிவாயுவின் விலை லிட் டருக்கு ரூ.90.50ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விலை இன்று காலை 6 மணி முதல் அமலுக்கு வந்தது.

## வெந்தயத்தின்நன்மைகள்



வெந்தயம் (வெந்தயக் கீரை) பல நன்மைகளை கொண்டுள்ளது. இது வயிறு சம்பந்தமான பிரச்சனைகளை சரிசெய்யவும், உடல் சூட்டை தணிக்கவும் பயன்படுகிறது. இது சீதபேதி, மூலநோய், முடி உதிர்தல், தோல் நோய், வாய்வுத்தொல்லை போன்றவற்றை போக்கவும் உதவுகிறது.

வெந்தயத்தின் நன்மைகள்:

சௌிமானத்திற்கு:

வெந்தயத்தில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கல் மற்றும் இரைப்பை பிரச்சனைகளுக்கு நிவாரணம் அளிக்கிறது.

கொழுப்பு அளவை குறைத்தல்:

வெந்தய தண்ணீர் குடிப்பதால் உடலில் கொழுப்பு தேக்கம் குறைகிறது, வளர்ச்சிதை மாற்று விகிதம் அதிகரிக்கிறது.

உடலை குளிர்வித்தல்:

வெந்தயம் உடல் சூட்டை தணித்து, உடலை குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது.

சர்க்கரை நோயாளிகளுக்கு:

வெந்தய தண்ணீர் குடிப்பதால் உடலில் இன்சுலின் உற்பத்தி தூண்டப்படுகிறது, சர்க்கரை நோயாளிகளுக்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

எடையை குறைத்தல்:

வெந்தய விதைகளில் உள்ள கரையக்கூடிய நார்ச்சத்துக்கள், அதிக நேரம் பசியை உணர வைக்க உதவுகிறது, இது எடையை குறைக்க உதவுகிறது.

உடல் வலி தீர:

வெந்தயக்கீரையை தோசையோடு சேர்த்து சாப்பிடுவதால் உடல் வன்மை கூடும், உடல் வலி குறையும்.

முடி உதிர்தல்:

வெந்தயம் முடி உதிர்தலை கட்டுப்படுத்தி, முடி வளர்ச்சிக்கு உதவுகிறது.

தோல் நோய்கள்:

வெந்தயம் தோல் நோய்களை குணப்படுத்தவும், புண்கள் ஆறவும் உதவுகிறது.

உடல் உஷ்ணம்:

வெந்தயம் மற்றும் கோதுமை இரண்டையும் சேர்த்து பொடித்து, கருப்பட்டி சேர்த்து கஷாயம் செய்து குடித்தால் உடல் உஷ்ணம் குறையும்.

வாய்வுத்தொல்லை:

வெந்தயத்தை மோரில் ஊறவைத்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவதால் வாய்வுத்தொல்லை நீங்கும்.

பித்த மயக்கம்:

வெந்தயக்கீரையை வேகவைத்து சாப்பிட்டால் பித்த மயக்கம் குணமடைய வாய்ப்புள்ளது.

புண் ஆற:

வெந்தயத்தை பால் அல்லது தயிரோடு சேர்த்து பூசினால் புண் ஆறும்.

## முருங்கை இலை மிளகு மசாலா பணியாரம்

தேவையான பொருட்கள்



1 டேபிள் ஸ்பூன் தேங்காய் துருவல்
1 டேபிள் ஸ்பூன் மிளகுப்பொடி
1- 1/2 கப் முருங்கைக்கீரை
2 கப் இட்லி மாவு
1/2 டீஸ்பூன் மிளகாய் தூள்
1/4 டீஸ்பூன் மஞ்சள் தூள்
1 வெங்காயம்

தாளிக்க :
1 டீஸ்பூன் எண்ணை
கடுகு
கடலை பருப்பு
உப்பு தேவையான அளவு

செய்முறை:

முதலில் ஒரு பாத்திரத்தில் இட்லி மாவை எடுத்து தயாராக வைத்துக்கொள்ளவும்.முருங்கை இலைகளை பிரித்து, நன்கு கழுவி சுத்தம் செய்து வைக்கவும்.

வாணலியில் எண்ணை சேர்த்து சூடானதும், கடுகு, கடலை பருப்பு சேர்த்து பொரிந்ததும், வெங்காயம் சேர்த்து வதக்கி, முருங்கை இலைகளை சேர்த்து வதக்கி, மஞ்சள் தூள்,மிளகாய் தூள், மிளகுத்தூள், உப்பு சேர்த்து நன்கு வதக்கி, தண்ணீர் தெளித்து,ஐந்துநிமிடங்கள் மூடிவைக்கவும்.பின்னர் எடுத்து தேங்காய் துருவல் கலந்து இறக்கி வைக்கவும்.சூடாறியவுடன் முருங்கை இலை, மிளகு மசாலாவை எடுத்து தயாராக வைத்துள்ள இட்லி மாவில் கலந்து வைக்கவும்.

பின்னர் பணியாரம் செய்யும் தவாவை சூடு செய்து, ஒவ்வொரு குழியிலும் எண்ணை ஊற்றி கலந்து வைத்துள்ள மாவை ஊற்றவும். ஒரு பக்கம் வெந்தவுடன், திருப்பிப்போட்டு மறுபக்கம் நன்கு வெந்தவுடன் எடுக்கவும்.இப்போது சுவையான மிளகு, மசாலா காரம் கலந்த, காரசார முருங்கை இலை, மிளகு மசாலா பணியாரம் சுவைக்கத்தயார்.

# காசநோய்: அறிகுறிகள் மற்றும் காரணங்கள்

இந்த நோய் ஒரு காலத்தில் மிகவும் அரிதாக இருந்தது, ஆனால் 1985 இல் எச்.ஐ.வி எய்ட்ஸ் வழக்குகளின் அதிகரிப்புடன் இது அதிகரிக்கத் தொடங்கியது (இது ஒரு முக்கிய காரணமாக இருந்தது, ஏனெனில் பாதிக்கப்பட்ட நபர் நோயெதிர்ப்பு குறைபாடுடையார், இது காசநோயை உண்டாக்கும் பாக்டீரியாக்களுக்கு எதிராக உடலின் போராடும் திறனைக் குறைக்கிறது).

காசநோய்க்கான மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் மருந்துகள் இப்போது பெரும்பாலான காசநோய் விகாரங்களில் எதிர்ப்பைக் கண்டுள்ளன, இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆண்டிபயாடிக் எதிர்ப்பைத் தடுக்க டோஸ்களின் கலவையை வழங்கலாம். 3 வாரங்கள் தொடர்ச்சியான மருந்துகளுக்குப் பிறகு பொதுவாக பாதிக்கப்பட்ட நபர் தொற்றுவதில்லை.

காசநோய் எவ்வளவு பொதுவானது ?

காசநோய் உலகளாவிய சுகாதாரப் பிரச்சினையாக உள்ளது, இது உலகளவில் மில்லியன் கணக்கானவர்களை பாதிக்கிறது. வளரும் நாடுகளில் இது மிகவும் பொதுவானது, அங்கு சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் மோசமான வாழ்க்கை நிலைமைகளுக்கான அணுகல் குறைவாக உள்ளது. இருப்பினும், இது குறைந்த விகிதத்தில் இருந்தாலும், வளர்ந்த நாடுகளிலும் உள்ளது.

நிச்சயமாக! காசநோய்க்கான (TB) நோயறிதல் மற்றும் சிகிச்சை முறைகளின் விரிவான முறிவு இங்கே உள்ளது.

காசநோயின் அறிகுறிகள்

காசநோயை உண்டாக்கும் பாக்டீரியாக்களை பாதுகாக்கும் திறன் நம் உடலுக்கு உண்டு. நம் உடலில் நோயெதிர்ப்பு அமைப்பு உள்ளது, இது அவற்றைக் கண்டறிந்து, நோயைப் பிடிப்பதைத் தடுக்கிறது. எனவே, காசநோயின் அறிகுறிகளைப் பொறுத்து மருத்துவர்கள் காசநோயை இரண்டாக வகைப்படுத்தியுள்ளனர்:


மறைந்திருக்கும் காசநோய்: இந்த வழக்கில், நபர் TB நோயால் பாதிக்கப்பட்டுள்ளார், ஆனால் எந்த அறிகுறிகளும் இல்லை. இந்த மாறுபாடு TB தொற்று அல்லது செயலற்ற கூஆ என்றும் அழைக்கப்படுகிறது. இது இயற்கையால் தொற்றக்கூடியது அல்ல,

ஆனால் அதன் சிகிச்சை முக்கியமானது, ஏனெனில் இது எந்தப் பிற்கால கட்டத்திலும் செயலில் உள்ள காசநோயாக மாறும்.

செயலில் உள்ள காசநோய்: இந்த மாறுபாடு அறிகுறிகளைக் காட்டுகிறது மற்றும் உங்களை நோய்வாய்ப்படுத்தலாம். இது காசநோய் என்றும் அழைக்கப்படுகிறது. இது காற்றில் உள்ள நீர்த்துளிகள் மூலம் மற்றவர்களுக்கு பரவும். இது பல வாரங்களுக்குப் பிறகும், காசநோயை உண்டாக்கும் பாக்டீரியாவால் பாதிக்கப்பட்ட பல வருடங்களுக்குப் பிறகும் கூட ஏற்படலாம்

காசநோயின் சில அறிகுறிகள் மற்றும் அறிகுறிகள் பின்வருமாறு:

பசியிழப்பு
இரவு வியர்வுகள்
மிகுந்த சோர்வு
நெஞ்சு வலி
இருமல் மற்றும் சுவாசத்துடன் வலி
3 வாரங்கள் அல்லது அதற்கு மேல் நீடித்த இருமல்
குளிர்
காய்ச்சல்
எதிர்பாராத அல்லது தேவையற்ற எடை இழப்பு
சளி அல்லது இரத்தம் இருமல்



காசநோய்க்கான சிகிச்சை ஹைதராபாத்தில் உள்ள ஒரு காசநோய் நிபுணர் மருத்துவரால் இது மிகவும் முக்கியமானது, ஏனெனில் இது மூளை, முதுகெலும்பு அல்லது சிறுநீரகம் போன்ற உடலின் மற்ற உறுப்புகளை பாதிக்கலாம்.

காசநோய்க்கான காரணங்கள்

நாம் பேசும்போது, இருமல் அல்லது தும்மும்போது காற்றில் மைக்ரோ துளிகளை வெளியிடுகிறோம் என்பதை நாம் அடிக்கடி உணர மாட்டோம். இந்த மைக்ரோ துளிகள் காசநோயை உண்டாக்கும் கிருமிகளுக்கு கேரியராக மாறுகிறது.

சுறுசுறுப்பான காசநோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் சிரிக்கும்போது, பேசும்போது, பாடும்போது, இருமல் அல்லது தும்மும்போது, அவர்/அவள் காசநோயை உண்டாக்கும் பாக்டீரியாவை காற்றில் உள்ள நுண்துளிகளுடன் சேர்த்து வெளியிடுகிறார்.

காசநோய் பரவுவது எளிது ஆனால் பிடிப்பது கடினம்; காசநோய் எளிதில் பரவ அனுமதிக்கும் சில காரணிகள் இருக்கலாம்:

சமரசம் செய்யப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி IV மருந்துகளைப் பயன்படுத்துதல்

வழக்கமான காசநோய் விகிதங்களை விட அதிகமாக உள்ள பகுதிகளுக்கு பயணம் செய்தல் அல்லது வசிப்பது

அதிக அளவில் மது அருந்துதல்

பாதிக்கப்பட்ட நபருடன் வாழ்வது

மோசமான காற்றோட்டம் மற்றும் அதிக நெரிசல் போன்ற பகுதிகளில் வேலை மனநல மருத்துவமனைகள், சிறைகள், முதியோர் இல்லங்கள் போன்றவை

நோய் கண்டறிதல்

மருத்துவ வரலாறு மற்றும் உடல் பரிசோதனை: சுகாதார வழங்குநர்கள் உங்கள் மருத்துவ வரலாறு, அறிகுறிகள் மற்றும் காசநோய் நோய்த்தொற்றின் அறிகுறிகளை சரிபார்க்க உடல் பரிசோதனை நடத்துவதன் மூலம் தொடங்குகின்றனர், அதாவது நிணநீர் முனைகளில் வீக்கம் அல்லது நுரையீரலில் அசாதாரண சுவாச ஒலிகள் போன்றவை.

டியூபர்குலின் தோல் பரிசோதனை (TST): இந்த சோதனையானது உங்கள் முன்கையின் தோலில் ஒரு சிறிய அளவு சுத்திகரிக்கப்பட்ட புரத வழித்தோன்றல் (PPD) டியூபர்குலினை உட்செலுத்துவதை உள்ளடக்கியது. உங்களுக்கு காசநோய் தொற்று இருந்தால், 48 முதல் 72 மணி நேரத்திற்குள் உட்செலுத்தப்பட்ட இடத்தில் ஒரு உயர்ந்த பம்ப் (இண்டூரேஷன்) ஏற்படுகிறது.

இரத்த பரிசோதனைகள்: இண்டர்ஃபெரான்-காமா வெளியீட்டு மதிப்பீடுகள் (IGR-As) போன்ற இரத்தப் பரிசோதனைகள் TB நோய்த்தொற்றைக் கண்டறிய உதவுகின்றன.

மார்பு எக்ஸ்ரே அல்லது இகூ ஸ்கேன்: இமேஜிங் சோதனைகள் நுரையீரல் அல்லது உடலின் மற்ற பகுதிகளில் காசநோய் தொற்றுக்கான அறிகுறிகளை வெளிப்படுத்தலாம்.

ஸ்பூட்டம் சோதனை: சளியின் மாதிரி (நுரையீரலில் இருந்து வெளியேறும் சளி) ஒரு நுண்ணோக்கின் கீழ் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகிறது அல்லது TB பாக்டீரியாவை அடையாளம் காண வளர்க்கப்படுகிறது.

பிற சோதனைகள்அறிகுறிகள் மற்றும் நோய்த்தொற்றின் சந்தேகத்திற்குரிய இடத்தைப் பொறுத்து, பயாப்ஸிகள், ப்ரோன்கோஸ்கோபி அல்லது பிற இமேஜிங்ஆய்வுகள்போன்றகூடுதல்சோதனைகள் பரிந்துரைக்கப்படலாம்.

சிகிச்சை

மருந்துகள்: காசநோய் நுண்ணுயிர் எதிர்ப்பிகளுடன் சிகிச்சையளிக்கப்படுகிறது. ஐசோனியாசிட், ரிஃபாம்பின், எத்தாம்புடோல் மற்றும் பைராசினமைடு ஆகியவை பொதுவாகப் பயன்படுத்தப்படும் மருந்துகள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், இந்த மருந்துகளின் கலவை பரிந்துரைக்கப்படுகிறது. சிகிச்சை ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் அல்லது அதற்கு மேல் நீடிக்கும்.

நேரடியாக கவனிக்கப்பட்ட சிகிச்சை (ஈஙெஊகூ)சிகிச்சை முறைகளை சிறப்பாகக் கடைப்பிடிப்பதற்காக, சுகாதாரப் பாதுகாப்பு வழங்குநர்கள் ஈஙெஊகூஐப் பயன்படுத்தலாம்,

அங்கு ஒரு சுகாதாரப் பணியாளர் அல்லது பயிற்சி பெற்ற நிபுணர் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை நீங்கள் தவறாமல் எடுப்பதை உறுதிசெய்கிறார்.

பின்தொடர்தல் சோதனைசிகிச்சையின் போது, முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், மருந்துகளுக்கு நோய்த்தொற்று பதிலளிப்பதை உறுதி செய்யவும் அவ்வப்போது சோதனைகள் நடத்தப்படுகின்றன.

இதில் ஸ்பூட்டம் சோதனைகள், மார்பு எக்ஸ்-கதிர்கள் மற்றும் பிற தொடர்புடைய மதிப்பீடுகள் இருக்கலாம்.

தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று கட்டுப்பாடு: காசநோய் தொற்று மிகவும் தொற்றக்கூடியதாக இருந்தால் அல்லது பல்வகை மருந்து-எதிர்ப்பு விகாரங்களை உள்ளடக்கியிருந்தால், தொற்று பரவுவதைத் தடுக்க தனிமைப்படுத்தல் அவசியமாக இருக்கலாம்.

சிகிச்சையை கடைபிடித்தல்அறிகுறிகள் மேம்பட்டாலும், பரிந்துரைக்கப்பட்டபடி மருந்துகளின் முழுப் போக்கையும் முடிப்பது முக்கியம்.

முழுமையடையாத சிகிச்சையானது மருந்து - எதிர்ப்பு காசநோய்க்கு வழிவகுக்கும், இது சிகிச்சையளிப்பது மிகவும் சவாலானது.

காசநோயைக் கண்டறிவதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் பல்வேறு சோதனைகள் மற்றும் மருந்துகளை உள்ளடக்கிய ஒரு விரிவான அணுகு முறை தேவைப்படுகிறது. சரியான நேரத்தில் நோயறிதல், சரியான மருந்தைப் பின்பற்றுதல் மற்றும் நெருக்கமான கண்காணிப்பு ஆகியவை வெற்றிகரமான சிகிச்சை விளைவுகளுக்கும் நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் முக்கியம். துல்லியமான நோயறிதல் மற்றும் சிகிச்சை உத்திகளுக்கு எப்போதும் சுகாதார நிபுணர்களிடமிருந்து வழிகாட்டுதலைப் பெறவும்.ஒரு மருத்துவரை எப்போது பார்க்க வேண்டும் நீங்கள் தொடர்ந்து இருமல் (மூன்று வாரங்களுக்கு மேல் நீடித்தது), மார்பு வலி, இரத்தம் அல்லது சளி இருமல், விவரிக்க முடியாத எடை இழப்பு, சோர்வு, காய்ச்சல் அல்லது இரவில் வியர்த்தல் போன்றவற்றை அனுபவித்தால் ஒரு சுகாதாரநிபுணரை அணுகவும்.

ஆபத்து காரணிகள்

பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்பு (எச்.ஐ.வி/எய்ட்ஸ் அல்லது பிற நிலைமைகள்), நெரிசலான சூழலில் வாழ்வது அல்லது வேலை செய்தல், போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பிற்கான போதிய அணுகல் உள்ளிட்ட பல காரணிகள் காசநோய் அபாயத்தை அதிகரிக்கின்றன.

தடுப்பு

பொதுவாக சில வாரங்கள் மருந்துகளை எடுத்துக்கொள்வதால், மக்களுக்கு தொற்று ஏற்படாது. எனவே, பாதிக்கப்பட்ட நபர் அன்புக்குரியவர்களிடையே நோய் பரவுவதைத் தடுக்க சில தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒருவர் மேற்கொள்ளக்கூடிய சில தடுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

முகமூடிகளைப் பயன்படுத்துங்கள்: செயலில் காசநோய் இருப்பது கண்டறியப்பட்ட பிறகு குறைந்தது 3 வாரங்களுக்கு மக்களைச் சுற்றி முகமூடியை அணிவதன் மூலம் பரவும் அபாயம் பன்மடங்கு குறைகிறது.

சரியான அறை காற்றோட்டம்: காற்றோட்டம் சரியாக இல்லாத இடங்களில் காசநோயை உண்டாக்கும் கிருமிகள் மிக எளிதாகப் பரவும். கதவுகள் அல்லது ஜன்னல்கள் வழியாக வெளியில் அறையின் காற்றை வீசுவதற்கு எப்பொழுதும் விசிறியைப் பயன்படுத்தலாம்.

வாயை மூடு: இருமல், பேசும் போது, தும்மல் போன்றவற்றின் போது வாயை மூடுவதற்குஒருடிஷ்யூவைஎப்போதும்பயன்படுத்த வேண்டும்.

பயன்படுத்திய திசுக்களை ஜிப்லாக் பையில் அடைத்து பின்னர் அப்புறப்படுத்த வேண்டும் .வீட்டிலேயே இரு: செயலில் நோயறிதலின் முதல் சில வாரங்களில் குறைந்தபட்சம் மக்களுடன் தொடர்பைத் தவிர்க்கவும். முறையான மருந்துகள் மற்றும் முன்னெச்சரிக்கைகள் மூலம் காசநோயை கட்டுப்படுத்தலாம். பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நோய் பரவாமல் தடுப்பது விவேகமானது.

ஹைதராபாத்தில் காசநோய் சிகிச்சைக்கான சிறந்த மருத்துவமனையாக கேர் மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எங்களிடம் மேல் உள்ளது ஹைதராபாத்தில் காசநோய் சிறப்பு மருத்துவர் காசநோய் மற்றும் பிற சுவாச நிலைமைகளைக் கண்டறிதல், மதிப்பீடு செய்தல் மற்றும் சிகிச்சையளிப்பதில் நிபுணத்துவம் பெற்றவர்கள்.

# ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பை: பெல்ஜியத்தை ஷூட் அவுட்டில் வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறியது இந்தியா

சென்னை: 14-வது ஆடவருக்கான ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி தொடர் சென்னை மற்றும் மதுரையில் நடைபெற்று வருகிறது. தற்போது இந்தத் தொடர் விறுவிறுப்பான நாக் அவுட் கட்டத்தை எட்டியுள்ளது. சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் நேற்று நடைபெற்ற முதல் கால் இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் - நியூஸிலாந்து அணிகள் மோதின.



இதில் ஸ்பெயின் 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன்னேறியது. ஸ்பெயின் அணி தரப்பில் நிக்கோலஸ் முஸ்டாரோஸ் (2-வது நிமிடம்), ஜோசப் மார்ட்டின் (10-வது நிமிடம்), ஆல்பர்ட் செர்ராஹிமா (12-வது நிமிடம்), புரூனோ அவிலா (60-வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

60-வது நிமிடத்தில் நியூஸிலாந்து அணியின் சேம் லின்ட்ஸ் பீல்டு கோல் அடித்து ஆட்டத்தை 3-3 என சமநிலைக்கு கொண்டுவந்தார். இதனால் போட்டி டிராவில் முடிவடைந்து வெற்றியை தீர்மானிக்க ஷூட்அவுட்டுக்கு செல்லும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சில நொடிகளிலேயே கிடைத்த பெனால்டி கார்னர் வாய்ப்பை புரூனோ அவிலா கோலாக மாற்றி ஸ்பெயின் அணியை வெற்றி பெறவைத்தார்.

2-வது கால் இறுதி ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான ஜெர்மனி - பிரான்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டம் நிர்ணயிக்கப்பட்ட 60 நிமிடங்களில் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தது. ஜெர்மனி அணி தரப்பில் அலெக் ஸ்க்வெரின் (30-வது நிமிடம்), பால் கிளாண்டர் (36-வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். பிரான்ஸ் அணி சார்பில் மாலோ மார்டினாச் (30-வது நிமிடம்), ஹூகோ டோலு (55-வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

டுத்து வெற்றியை தீர்மானிக்க நடத்தப்பட்ட ஷூட் அவுட்டில் 7 முறை சாம்பியனான ஜெர்மனி 3-1 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணியை வீழ்த்தி அரை இறுதி சுற்றில் கால்பதித்தது. 3-வது கால் இறுதி ஆட்டத்தில் 2 முறை சாம்பியனான அர்ஜெண்டினா, நெதர்லாந்துடன் மோதியது. இதில் அர்ஜெண்டினா 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கால் இறுதி சுற்றில் கால் பதித்தது. அர்ஜெண்டினா அணி தரப்பில் 55-வது நிமிடத்தில் தாமஸ் ரூயிஸ், பெனால்டி கார்னர் வாய்ப்பை கோலாக மாற்றி அசத்தினார்.

கடைசி கால் இறுதி ஆட்டத்தில் இந்தியா - பெல்ஜியம் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. தொடக்க நிமிடத்தில் இந்தியாவுக்கு பெனால்டி கார்னர் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இதில் கோல் அடிக்கும் இந்திய அணியின் முயற்சியை பெல்ஜியம் அணியின் கோல்கீப்பர் அற்புதமாக தடுத்தார். 13-வது நிமிடத்தில் பெல்ஜியம் அணி முதல் கோலை அடித்து இந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுத்தது. இந்த கோலை காஸ்பர்ட் கோர்னெஸ் மாசன்ட் பீல்டு கோலாக அடித்து அசத்தினார்.

முதல் பாதியின் இறுதிப் பகுதியில் இந்தியாவுக்கு 2-வது பெனால்டி கார்னர் வாய்ப்பு கிடைத்தது. இதில் இந்திய வீரர் மன்மீத் சிங் இலக்கை நோக்கி அடித்த பந்தை பெல்ஜியம் அணி தனது டிஃபன்ஸால் கோல் விழவிடாமல் தடுத்தது. முதல் பாதி ஆட்டத்தின் முடிவில் பெல்ஜியம் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

39-வது நிமிடத்தில் இந்திய அணிக்கு 3-வது பெனால்டி கார்னர் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இதையும் பெல்ஜியம் அணியின் தற்காப்பு அரண் தடுத்து நிறுத்தியது. 45-வது நிமிடத்தில் இந்திய அணி பதிலடி கொடுத்தது. பெனால்டி கார்னர் வாய்ப்பை இந்திய அணியின் கேப்டன் ரோஹித் கோலாக மாற்றினார். தொடர்ந்து 48-வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கார்னர் வாய்ப்பை ஷர்தாநிவாரி கோலாக மாற்ற இந்திய அணி 2-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. 57-வது நிமிடத்தில் இந்திய அணியின் பீல்டு கோல் அடிக்கும் முயற்சியை பெல்ஜியம் கோல்கீப்பர் அலெக்ஸிஸ் தடுத்தார். 59-வது நிமிடத்தில் இந்திய அணியின் பலவீமான டிஃபன்ஸால் பெல்ஜியம் அணியின் நேதன் ரோகி பீல்டு கோல் அடித்தார். இதனால் ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையை எட்டியது. முடிவில் நிர்ணயிக்கப்பட்ட 60 நிமிடங்களில் ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தது. இதையடுத்து வெற்றியை தீர்மானிக்க ஷூட் அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் இந்திய அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன்னேறியது.

# இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் 2-வது டெஸ்ட் போட்டி: 378 ரன் குவித்து ஆஸ்திரேலியா முன்னிலை

பிரிஸ்பன்: ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் 2-வது போட்டியில் ஆஸ்திரேலிய அணி 2-வது நாள் ஆட்டத்தின் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 378 ரன்கள் குவித்தது. ஜேக் வெதரால்ட், மார்னஷ் லபுஷேன், கேப்டன் ஸ்டீவ் ஸ்மித் ஆகியோர் அரை சதம் அடித்தனர்.




பிரிஸ்பனில் உள்ள காபா மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த ஆட்டத்தில் டாஸ் வென்று பேட் செய்த இங்கிலாந்து அணி முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் 74 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 325 ரன்கள் எடுத்தது. ஜோ ரூட் 135, ஜோப்ரா ஆர்ச்சர் 32 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்று 2-வது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய இங்கிலாந்து அணி மேற்கொண்டு 9 ரன்களை சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தது. ஜோப்ரா ஆர்ச்சர் 36 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளுடன் 38 ரன்கள் எடுத்த நிலையில் பிரண்டன் டாகெட் வீசிய பந்தை டீப் பேக்வேர்டு ஸ்கொயர் திசையில் விளாசிய போது மார்னஷ் லபுஷேன் டைவ் அடித்து ஒற்றை கையால் கேட்ச் செய்து அசத்தினார். முடிவில் இங்கிலாந்து அணி 76.2 ஓவர்களில் 334 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. ஜோ ரூட் 206 பந்துகளில், ஒரு சிக்ஸர், 15 பவுண்டரிகளுடன் 138 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். கடைசி விக்கெட்டுக்கு இந்த ஜோடி 70 ரன்கள் சேர்த்தது. ஆஸ்திரேலிய அணி தரப்பில் மிட்செல் ஸ்டார்க் 6 விக்கெட்கள் வீழ்த்தினார். மைக்கேல் நேசர், பிரண்டன் டாகெட், ஸ்காட் போலண்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினர்.

இதையடுத்து விளையாடிய ஆஸ்திரேலிய அணி 2-வது நாள் ஆட்டத்தின் முடிவில் 73 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 378 ரன்கள் குவித்தது. தொடக்க வீரரான டிராவிஸ் ஹெட் 43 பந்துகளில், ஒரு சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 33 ரன்கள் எடுத்த நிலையில் பிரைடன் கார்ஸ் பந்தில் ஆட்டமிழந்தார்.

முதல் விக்கெட்டுக்கு டிராவிஸ் ஹெட், ஜேக் வெதரால்டு ஜோடி 13.1 ஓவர்களில் 77 ரன்கள் சேர்த்தது.

இதையடுத்து களமிறங்கிய மார்னஷ் லபுஷேன், ஜேக் வெதரால்டுடன் இணைந்து சீராக ரன்கள் சேர்த்தார். தனது முதல் அரை சதத்தை கடந்த ஜேக் வெதரால்டு தாக்குதல் ஆட்டம் வாயிலாக விரைவாக ரன்கள் சேர்த்தார். சிறப்பாக பேட் செய்து வந்த அவர், 78 பந்துகளில், ஒரு சிக்ஸர், 12 பவுண்டரிகளுடன் 72 ரன்கள் எடுத்த நிலையில் ஜோப்ரா ஆர்ச்சர் பந்தில் எல்பிடபிள்யூ ஆனார். இதன் பின்னர் களமிறங்கிய கேப்டன் ஸ்டீவ் ஸ்மித் சீராக ரன்கள் சேர்த்து அழுத்தம் கொடுத்தார்.

25-வது அரை சதத்தை கடந்த மார்னஷ் லபுஷேன் 78 பந்துகளில், ஒரு சிக்ஸர், 9 பவுண்டரிகளுடன் 65 ரன்கள் எடுத்த நிலையில் பென் ஸ்டோக்ஸ் பந்தில் விக்கெட் கீப்பர் ஜேமி ஸ்மித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் களமிறங்கிய கேமரூன் கிரீன் 57 பந்துகளில், 7 பவுண்டரிகளுடன் 45 ரன்கள் எடுத்த நிலையில் பிரைடன் கார்ஸ் பந்தில் போல்டானார். தனது 44-வது அரை சதத்தை அடித்த ஸ்டீவ் ஸ்மித் 85 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 61 ரன்கள் எடுத்த நிலையில் பிரைடன் கார்ஸ் பந்தில் டீப் பேக்வேர்டு ஸ்கொயர் திசையில் வில் ஜேக்ஸிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து ஜோஷ் இங்லிஷ் 23 ரன்களில் பென் ஸ்டோக்ஸ் பந்தில் போல்டானார்.

அலெக்ஸ் கேரி 46, மைக்கேல் நேசர் 15 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இங்கிலாந்து அணி சார்பில் பிரைடன் கார்ஸ் 3, பென் ஸ்டோக்ஸ் 2 விக்கெட்களை வீழ்த்தினர். அலெக்ஸ் கேரி ரன் ஏதும் எடுக்காத நிலையில் பிரைடன் கார்ஸ்பந்தில் கொடுத்த எளிதான கேட்ச்சை பென்டக்கெட் கோட்டைவிட்டார். ஜோஷ் இங்லிஷ் 21 ரன்களில்இருந்த போது கொடுத்த கேட்ச்சை கல்லி திசையில் பென் டக்கெட் தவறவிட்டார்.

மைக்கேல் நேசர் 6 ரன்களில் இருந்த போது கவர் திசையில் கொடுத்த கேட்சை பிரைடன் கார்ஸ் நழுவவிட்டார். அலெக்ஸ் கேரி 25 ரன்கள் இருந்த போது கொடுத்த கேட்ச்சை முதல் சிலிப் திசையில் நின்ற ஜோ ரூட் தவறவிட்டார்.

# ஒருநாள் தொடரை வெல்வது யார்? – இந்தியா VS தென் ஆப்பிரிக்கா பலப்பரீட்சை

விசாகப்பட்டினம்: இந்தியா - தென் ஆப்பிரிக்கா ணிகள் இடையிலான கடைசி மற்றும் 3-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி விசாகப்பட்டினத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறுகிறது. இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி தொடரை வெல்லும். இதனால் ரசிகர்கள் மத்தியில் இந்த பாட்டி மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.




இரு அணிகள் இடையே ராஞ்சியில் நடைபெற்ற முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 17 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. தொடர்ந்து ராய்ப்பூரில் நடைபெற்ற 2-வது ஒருநாள் போட்டியில் 359 ரன்கள் இலக்கை விரட்டிய தென் ஆப்பிரிக்க அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடர் 1-1 என சமநிலையை அடைந்தது.

இந்நிலையில் தொடரை வெல்வது யார்? என்பதை தீர்மானிக்கும் வகையில் அமைந்துள்ள 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி விசாகப்பட்டினத்தில் நடைபெறுகிறது.

வழக்கமாக இந்திய அணியில் சீனியர் வீரர்களுக்குதான் நெருக்கடி உருவாகும். ஆனால் இம்முறை இளம் வீரர்களுக்கு அழுத்தம் உருவாகி உள்ளது. 2-வது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 358 ரன்களை குவித்த போதிலும் வெற்றியை வசப்படுத்த முடியாமல் போனது. எய்டன் மார்க்ரம், டெவால்ட் பிரேவிஸ், மேத்யூ ப்ரீட்ஸ்கே ஆகியோர் இந்திய பந்துவீச்சுக்கு எதிராக சரளமாக ரன்கள் சேர்த்தனர். இதற்கு பிரசித் கிருஷ்ணா, அர்ஷ்தீப் சிங், ஹர்ஷித் ராணா, குல்தீப் யாதவ், ரவீந்திர ஜடேஜா ஆகியோரிடம் இருந்து தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அளவிலான செயல் திறன் வெளிப்படாததே காரணம். அதேவேளையில் ஆல்ரவுண்டராக வாஷிங்டன் சுந்தரும் சிறப்பான செயல் திறனை வெளிப்படுத்தவில்லை. இன்றைய ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்க அணியின் பேட்டிங் வரிசையை கட்டுப்படுத்தினால் மட்டுமே தொடரை வெல்வதற்கான வாய்ப்பு கைகூடும்.

பேட்டிங்கில் விராட் கோலி அசுர பார்மில் உள்ளார். தொடர்ச்சியாக இரு சதங்கள் விளாசி உள்ள அவரிடம் இருந்து மேலும் ஒரு சிறந்த இன்னிங்ஸ் வெளிப்படக்கூடும். இதேபோன்று கடந்த ஆட்டத்தில் அதிரடியாக விளையாடி சதம் விளாசிய ருதுராஜ் கெய்க்வாட்டும் மீண்டும் ஒரு ரன்வேட்டையில் ஈடுபட முயற்சிக்கக்கூடும். அதேவேளையில் ரோஹித் சர்மாவும் தனது பங்களிப்பை வழங்குவதில் முனைப்பு காட்டக்கூடும். மற்றொரு தொடக்க வீரரான யஷஸ்வி ஜெய்ஸ்வால் இரு ஆட்டங்களிலும் முறை 18, 22 ரன்களில் ஆட்டமிழந்தார். விரைவாக ரன்கள் சேர்க்க வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்டு விக்கெட்டை பறிகொடுப்பதை ஜெய்ஸ்வால் வாடிக்கையாக கொண்டுள்ளார். மேலும் இடதுகை வேகப்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக தடுமாறி வருகிறார். அனைத்து வடிவிலான போட்டிகளிலும் ஜெய்ஸ்வால் இடதுகை வேகப்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக 30 முறை ஆட்டமிழந்துள்ளார். இதற்கான தீர்வை அவர், கண்டுபிடிக்க முயற்சிக்கக்கூடும்.

கடந்த ஆட்டத்தில் இந்திய 40 ஓவர்கள் வரை ரன்கள் வேட்டையாடியது. ஆனால் கடைசி 10 ஓவர்களில் 74 ரன்கள் மட்டுமே சேர்த்தது. ரவீந்திர ஜடேஜா மந்தமாக விளையடி 27 பந்துகளில் 24 ரன்கள் மட்டுமே எடுத்தது ஆட்டத்தின் முடிவில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி இருந்தது. ஏனெனில் பனிப்பொழிவால் தென் ஆப்பிரிக்க வீரர்கள் இலக்கை எந்த வித சிரமமும் இல்லாமல் எளிதாக விரட்டினர். இதனால் இன்றைய ஆட்டத்தில் இந்திய அணி முதலில் பேட் செய்யும் பட்சத்தில் கூடுதலாக ரன்களை குவிப்பதில் கவனம் செலுத்தக்கூடும். இன்றைய ஆட்டத்தில் இந்திய அணியில் ஒரு சில மாற்றங்கள் இருக்கக்கூடும்.

நடுவரிசையில் பேட்டிங்கை பலப்படுத்தும் வகையில் வாஷிங்டன் சுந்தருக்கு பதிலாக திலக் வர்மா அல்லது ரிஷப் பந்த் களமிறக்கப்பட வாய்ப்பு உள்ளது. தென் ஆப்பிரிக்க அணி கடந்த ஆட்டத்தில் பெற்ற வெற்றியால் உற்சாகத்துடன் களமிறங்குகிறது. பேட்டிங்கில் எய்டன் மார்க்ரமின் வலுவான தொடக்கம், கேப்டன் தெம்பா பவுமாவின் நிதானமான ஆட்டம், நடுவரிசையில் மேத்யூ ப்ரீட்ஸ்கேவின் சீரான ரன் குவிப்பு, டெவால்ட் பிரேவிஸின் அதிரடி ஆகியவை பலம் சேர்க்கிறது. பின்வரிசையில் மார்கோ யான்சன், கார்பின் போஷ் ஆகியோரும் அதிரடியில் மிரட்டக்கூடியவர்களாக திகழ்கின்றனர். கடந்த ஆட்டத்தில் காயம் அடைந்த நந்த்ரே பர்கர், டோனி டி ஸோர்ஸி ஆகியோர் இன்றைய ஆட்டத்தில் களமிறங்குவது சந்தேகம்தான்.

# 'ஹைக்கூ' முதல் பார்வை வெளியீடு



ஹரிஹரன் ராம் இயக்கிய 'ஜோ', சீனு ராமசாமி இயக்கிய 'கோழிப்பண்ணை செல்லதுரை' ஆகிய திரைப்படங்கள் மூலம் பிரபலமான ஏகன், அடுத்து நடிக்கும் படத்தை யுவராஜ் சின்னசாமி இயக்குகிறார். விஷன் சினிமா ஹவுஸ் சார்பில் டாக்டர்அருளானந்து மற்றும் மேத்யூ அருளானந்து தயாரிக்கின்றனர். தெலுங்கு நடிகை ஸ்ரீதேவி, மலையாள நடிகை ஃபெமினா ஜார்ஜ் கதாநாயகிகளாக நடிக்கும் இப்படத்தின் தொடக்க விழா சமீபத்தில் நடந்தது.

இந் நிலையில் தயாரிப்பாளர் மேத்யூ அருளானந்து வின் பிறந்த நாளை முன்னிட்டு படத்தின் தலைப்பையும் முதல் தோற்றப் போஸ்டரையும் படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி இப்படத்துக்கு 'ஹைக்கூ' என்று தலைப்பு வைத்துள்ளனர். இப்படம் தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் உருவாகிறது.

# 99/66' படத்துக்காக புத்த மடாலயங்களில் ஷூட்டிங்

சபரி, ரோகித், ரக்சிதா மகாலட்சுமி, ஸ்வேதா, பவன்கிருஷ்ணா, கே.ஆர்.விஜயா, கே.எஸ்.வெங்கடேஷ், எஸ்.சினேகா, குமாரி கனிஷ்கா, ஸ்ரீலேகா, சிங்கம் புலி, பி.எல்.தேனப்பன் ஆகியோர் நடித்துள்ள படம், ''99/66 தொண்ணூற்று ஒன்பது அறுபத்தியாறு''. மித்ரா பிக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பில் எம்.எஸ்.மூர்த்தி எழுதி இயக்கி, இசை அமைத்து, தயாரித்துள்ளார். சேவிலோ ராஜா ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படம் பற்றி எம்.எஸ்.மூர்த்தி கூறும்போது ''சென்னையில் உள்ள 99 வீடுகள் கொண்ட ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பில் இதன் கதை நடக்கிறது. அதனால் தான் இந்தப் படத்துக்கு '99/66 தொண்ணூற்று ஒன்பது அறுபத்தியாறு' என்று பெயர் வைத்துள்ளோம். அந்தக் குடியிருப்பில் அவ்வப்போது நடைபெறும் சில அமானுஷ்ய சம்பவங்கள், குடியிருப்பு வாசிகளைப் பயமுறுத்திப் பீதி கொள்ள வைக்கிறது.



எதனால் அப்படி நடக்கிறது? அதன் பின்னணியில் இருப்பது என்ன? என்பதைச் சபரியும், அது முடிந்ததா என்பது திரைக்கதை. தாய்லாந்து, பர்மா, இலங்கை போன்ற பகுதிகளில் புத்தமடாலயத்தில் ஐநூறு புத்த பிக்குகளின் மத்தியில் பாடல்களையும் சில காட்சிகளையும் படமாக்கியுள்ளோம். விரைவில் படத்தின் இசை வெளியீட்டு விழா பிரம்மாண்டமாக நடைபெற உள்ளது'' என்றார்.

# அம்மா சென்டிமென்டை ஆழமாகச் சொன்ன படம் 'அம்மா'

மலையாள சினிமாவின் முதல் சூப்பர் ஸ்டார் திக்குரிசி சுகுமாரன். சுமார் 700 படங்களுக்கு மேல் நடித்திருக்கும் அவர், வாங்கியிருக்கும் விருது பட்டியலே மீக நீளமானது. சில படங்களை இயக்கியும் உள்ள அவர் நடித்து, தமிழ், மலையாளத்தில் உருவான படம், 'அம்மா'. அம்மாவின் தியாகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவான இப்படத்தைத் தயாரித்தவர் டி.இ.வாசுதேவன். இவர், அப்போது தமிழ்ப் படங்களை, தனது அசோசியேட்டட் பிக்சர்ஸ் சார்பில் கேரளாவில் விநியோகித்து வந்தார். அப்போது தமிழ் நாட்டைச் சேர்ந்த சில தயாரிப்பாளர்களுடன் பழக்கம் ஏற்பட்டது. அவர்கள் உதவியுடன் தயாரிப்பாளர் ஆக முடிவு செய்தார், வாசுதேவன். அப்படி அவர் தயாரித்த முதல்திரைப்படம், 'அம்மா'. கே.வேம்பு இயக்கினார். திக்குரிசி சுகுமாரன் ஹீரோவாக நடித்த இப்படத்தில் திருவிதாங்கூர் சகோதரிகளில் ஒருவரான, லலிதா நாயகியாக நடித்தார். அப்போது தமிழிலும் லலிதா பிரபலமானவராக இருந்ததால் தமிழிலும் படத்தை உருவாக்கினர். அம்மாவாக ஆரன்முளா பொன்னம்மா நடித்தார். லட்சுமி (ஆரமுளா பொன்னம்மா) தனது மகன் வேணு (திக்குரிசி), மகள் சாரதா (பி.எஸ்.சரோஜா) ஆகியோரை வளர்க்கப் பொருளாதார ரீதியாகப் போராடுகிறார். மேற்படிப்புக்காக சென்னை செல்லும் மகன் வேணு, பணக்கார தொழிலதிபரின் மகள் ராதாவை (லலிதா) காதலிக்கிறார். படிப்பை முடித்து விட்டு திரும்பும் வேணு, அம்மாவிடம் தனது காதல் கதையை சொல்கிறார்.

சமூக அந்தஸ்தை காரணம் காட்டி மறுக்கும் லட்சுமி, ஒரு கட்டத்தில் மகனுக்காக ராதாவின் வீட்டில் பெண் கேட்கிறார். ராதாவின் பணக்காரத் தந்தை அவமானப்படுத்துவதால், மனம் உடைகிறார். இதற்கிடையே, ராதாவும் வேணுவும் வீட்டுக்குத் தெரியாமல் திருமணம் செய்துகொள்கிறார்கள். லட்சுமி, அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறார்.

வேணுவுக்கு சென்னையில் வேலை கிடைக்கிறது. கிராம வாழ்க்கையை சமாளிக்க முடியாமல் ராதாவும் சென்னை செல்கிறார். மகனின் படிப்பு செலவுக்காக வாங்கிய கடனுக்காக வீட்டை விட்டு வெளியேற்றப்படுகிறார், லட்சுமி. சென்னைக்கு வரும் அவரை, ராதா மோசமாக நடத்துகிறார். அங்கிருந்தும் வெளியேறும் லட்சுமி, சாலை விபத்தைச்சந்திக்கிறாள். வேலை செய்யும் இடத்தில் மகனுக்குத் திருட்டுப் பட்டம் கிடைக்கிறது. பிறகு அம்மா என்ன மாதிரியான தியாகங்களைச் செய்கிறார் என்று கதை போகும். அம்மா சென்டிமென்டை ஆழமாகச் சொன்ன திரைப்படம் இது. கதை எதார்த்தத்தில் இருந்து விலகினாலும் சுவாரஸ்யமாக இருப்பதாக அப்போது விமர்சிக்கப்பட்டது. 2 மொழிக்கும் வி. தட்சிணாமூர்த்தி இசை அமைத்தார். மொத்தம் 14 பாடல்கள். இதில் பெரும்பாலானவற்றில் இந்தி சாயல் இருந்ததாகக் கூறப்பட்டது. இசை அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி இப்படம் மூலம் பின்னணிப் பாடகராகவும் அறிமுகமானார். இதில், ஆரன்முளா பொன்னம்மாவின் நடிப்பு பாராட்டப்பட்டது. 1952-ம் ஆண்டு இதே தேதியில் (டிச.6) வெளியான இப்படம் தமிழ், மலையாளத்தில் வரவேற்பைப் பெற்றது.

TO ADVERTISE
PLEASE CONTACT
மெட்ராஸ் மணி
MADRAS MANI
NATIONAL TAMIL DAILY NEWS PAPER
9000657700
9912220350
e.mail : info.southindiatimes@gmail.com

Printed Published and Owned by Buchi Babu Vuppala, Printed At Thanmayee Printers, No:7,3 RD street, Krishna Nagar, Moouarasampet, Madipakkam Chennai-91, Tamil Nadu. Published from 8/5, Mannarswamy koil street, PULIANTHOPE, Chenni-600012, Tamil Nadu Editor: **H.MD. HARIEF,** mail: info.southindiatimes@gmail.com, phone.9000657700, **RNI Reg No. TNTAM/2018/75087.**